தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வலுவடைந்தது காற்றழுத்த தாழ்வு பகுதி: தென் தமிழகத்தில் கன மழை எச்சரிக்கை



**சென்னை,**

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி வலுவடைந்து, தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. அடுத்த 48 மணி நேரத்துக்குள் அது மேலும் வலுவடைந்து தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக புதன்கிழமை (மே 7) தென் தமிழகத்தில் கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மாநிலத்தின் பிற இடங்களிலும் பரவலாக மழை பெய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும். இதனால் மீனவர்கள் தென் தமிழக கடலுக்குள் பயணிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதி, வலுவடைந்து தாழ்வு மண்டலமாக மாறும் நிலையில், தமிழகத்தில் தொடர்ந்து சில நாள்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாழ்வுப் பகுதி காரணமாக செவ்வாய்க்கிழமை (மே 6) மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான விவரங்களின்படி நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், காரைக்கால், ராமநாதபுரம், தஞ்சாவூர், சிவகங்கை உள்பட பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்துள்ளது.

சென்னையில் திங்கள்கிழமை இரவு மற்றும் அதிகாலையில் மழை பெய்தது. பகல் வேளைகளில் மேகமூட்டத்துடன் சிறிய தூறல் இருந்தது. கத்திரி வெயில் தொடங்கி, கோடையின் தாக்கம் உச்சமடைந்திருந்த நிலையில் குமரிக் கடல் பகுதியில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காரணமாக மாநிலம் முழுவதும் வெப்பநிலை குறைந்துள்ளது.

**இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:**

மாநிலம் முழுவதும் வெப்பம் அதிகரித்து வந்த நிலையில், குமரிக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது. அது தற்போது வலுவடைந்து அதே இடத்தில் நீடித்து வருகிறது.

இது நகரும் திசையைப் பொருத்து மழை வாய்ப்பு மாறுபடும். அடுத்த 48 மணி நேரத்துக்குப் பிறகே அது புயலாக மாறுமா என்பது குறித்து கணிக்க முடியும். இதன் காரணமாக மாநிலம் முழுவதும் பரவலான மழையை எதிர்பார்க்கலாம் என்றார் அவர்.

செவ்வாய்க்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

மயிலாடுதுறை - 70, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை - 60, காரைக்கால், கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில், சேத்தியாதோப்பு, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம், கடலூர், குளச்சல் - 50, காரைக்குடி,

நாகப்பட்டினம், கடலூர் மாவட்டம் ஸ்ரீ முஷ்ணம், மானாமதுரை, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி - 40.

**<u>கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கு மே 12 முதல் விண்ணப்பம் விநியோகம்</u>**

**நாமக்கல்,**

இளநிலை கால்நடை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் மே 12-ஆம் தேதி முதல் விநியோகிக்கப்பட உள்ளன.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய முதல்வர் கே.ஏ.துரைசாமி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், 2014-15-ஆம் ஆண்டு அளிக்கப்படும் கால்நடை மருத்துவம், உணவுத் தொழில்நுட்பம், கோழியின உற்பத்தித் தொழில்நுட்பப் படிப்புகளுக்கான இளநிலைப் பிரிவில் சேர விண்ணப்பப் படிவங்கள் நாமக்கல்லில் திருச்சி சாலையிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வருகிற 12-ஆம் தேதி முதல் விநியோகிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்துக்கான கட்டணம் ரூ.600. தலித், பழங்குடியின மாணவர்கள் ரூ.300 மட்டும் செலுத்தினால் போதும்.

இந்தக் கட்டணத்தை யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா கிளையில் செலுத்தி ரசீது பெற்று, அதனுடன் விண்ணப்பக் கடித்தை இணைத்து அளித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மே 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பத்தைப் பெற்று, ஜூன் 2-ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் சென்னையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தில் அளிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் குறித்த வழிமுறைகள், இதர விவரங்களையும் www.tanuvas.ac.inugadmission என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286- 266491, 220650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைப் பெரியாறு: இன்று தீர்ப்பு



**புது தில்லி,**

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசுக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த பிரதான வழக்கின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் புதன்கிழமை (மே 7) அளிக்கவுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, அணை விவகாரம் தொடர்பான விசாரணையை முடித்து தீர்ப்பை ஒத்திவைத்திருந்தது.

தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா, நீதிபதிகள் எச்.எல். தட்டு, சந்திரமௌலி குமார் பிரசாத், மதன் பி. லோகுர், எம்.ஒய். இக்பால் அடங்கிய அரசியல் சாசன அமர்வு கடந்த ஆண்டு ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 21-ஆம் தேதி வரை முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக, கேரள அரசுகள் தாக்கல் செய்த மனுக்கள், அணையின் ஸ்திரத்தன்மை தொடர்பாக நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் குழு அளித்த அறிக்கை, இரு மாநில அரசுகளின் அதிகார வரம்புகள் உள்ளிட்டவை குறித்து விசாரித்தது. அதைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பு புதன்கிழமை அளிக்கப்படுகிறது.

முன்னதாக, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த வேண்டும் என 2006-இல் கேரள அரசுக்கு உச்ச நீதிமன்ற மூன்று நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டிருந்தது.

ஆனால், அத் தீர்ப்பு வெளியான மூன்று நாள்களில் கேரள அரசு அம் மாநில சட்டப்பேரவையில் அணை பாதுகாப்புச் சட்டத்திருத்தம் மேற்கொண்டு நீர்மட்டத்தை உயர்த்தாமல் இருக்க நடவடிக்கை மேற்கொண்டது. இதனால், கேரள அரசின் செயல்பாட்டை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

## மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி

**சென்னை,**

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அண்ணா பல்கலைக்கழகம் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இது குறித்து அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்தி:

இந்தத் திட்டத்தின் கீழ் கோவை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் காய்கறி, தர்பூசணி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொடுக்கப்படும்.

குறைந்த அளவில் தண்ணீரைப் பயன்படுத்தி அதிக அளவில் தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்து, விவசாயிகள் அதிக லாபம் பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் 300 முதல் 500 விவசாயிகளைக் கொண்டு மூன்று மாவட்டங்களில் 300 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை இந்தத் திட்டத்தில் 40 விவசாயிகள், 45 ஹெக்டேரில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தோட்டக்கலை பயிர்களைப் பயிர் செய்து வருகின்றனர்.

எவ்வளவு மானியம் கிடைக்கும்? சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு ஆகும் செலவில் சிறு விவசாயியாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு (2.47 ஏக்கர்) அதிகபட்சமாக ரூ. 97,598 மானியம்

கிடைக்கும். பெரிய விவசாயியாக இருந்தால் ரூ. 73,198 மானியமாக இத்திட்டத்தின் மூலம் பெற்று பயன் பெறலாம்.

மானியத் தொகை போக மீதி தொகையை விவசாயி வரைவோலையாக கொடுக்க வேண்டும். இந்தத் திட்டத்தால் பாசனத்துக்கு அதிக அளவு தண்ணீர் தேவைப்படாது என்பதோடு, உரச் சிக்கனம், மின்சாரச் சிக்கனமும் கிடைக்கிறது என பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

தொடர்புக்கு: பேராசிரியர் மாதவி கணேசன், இணை பேராசிரியர் மற்றும் முதன்மை திட்டச் செயலர் நீர்வள மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 600 025.

தொலைபேசி - 044-22357458, 9940245288

திரு.வி.ராம்ஜி, உதவி பேராசிரியர் மற்றும் துணை திட்டச் செயலர், நீர்வள மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 600 025.

தொலைபேசி -044-22357456.

## கொடைக்கானலில் மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் மழை பெய்ததை அடுத்து, விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் சீசன் தொடங்கியுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளின் வருகை தினமும் கணிசமாக அதிகரித்து வருகிறது. பகல் நேரங்களில் லேசான சாரல் மழையும், அவ்வப்போது மேகமூட்டமும் நிலவி வருவதால், இதமான சூழ்நிலையை பயணிகள் வெகுவாக அனுபவித்து வருகின்றனர்.

கொடைக்கானலில் கடந்த பல மாதங்களாக பருவமழை பெய்யாததால், நகர்ப் பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

உணவகங்களிலும், விடுதிகளிலும் சுற்றுலாப் பயணிகள் தங்க முடியாமல் அவதிப்பட்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து, கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருவதால், நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது. இதனால்,

கொடைக்கானல் புறநகர்ப் பகுதிகளில் ஓரளவுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்குவதற்கு வாய்ப்புள்ளது.

மேலும், விவசாயம் செய்வதற்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேலும், செவ்வாய்க்கிழமை மாலை மிதமான மழை பெய்தது. இந்த மழையால் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர். இதனால், கொடைக்கானலில் குளுமை நிலவி வருகிறது.

## சிவகங்கை மாவட்டத்தில் 3ஆவது நாளாக மழை

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாக செவ்வாய்க்கிழமையும் மழை பெய்துள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்தம் தாழ்வு காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு விவரம்.

காரைக்குடி 43மிமீ., மானாமதுரை 37, சிவகங்கை 31, திருப்புவனம் 30.6, திருப்பத்தூர் 2, இளையான்குடி 7மி.மீ.

## பரமக்குடி பகுதியில் பலத்த மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி

**பரமக்குடி,**

பரமக்குடி பகுதியில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால் சாலைகள் மற்றும் தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பரமக்குடி நகர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பருவமழை பொய்த்து விட்டதால், வறட்சியால் விவசாயம் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. மேலும் வைகை ஆற்றிலும்

தண்ணீரின்றி வறட்சி ஏற்பட்டு, நிலத்தடி நீர் மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே சென்றது.

இதனால் நகர்புறத்தில் உள்ள வீடுகளில் ஆழ்குழாய்களில் தண்ணீரின்றி வீடுகளை உடைத்து மாற்று ஆழ்குழாய் அமைக்கும் பணியினை பொதுமக்கள் மேற்கொண்டு வந்தனர். கிராமங்களில் நீர் ஆதாரமுள்ள இடங்களில் கோடை விவசாயமாக பருத்தி, கடலை பயிர் சாகுபடி செய்து வந்தனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு தொடங்கிய மழை 3.50 மணிவரை கொட்டித் தீர்த்தது. இதனால் நகர் பகுதியில் தெருக்கள், சாலைகள் மற்றும் மதுரை-ராமேசுவரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அவ்வழியாக சென்ற இருசக்கர வாகனம், ஆட்டோக்கள் மழைநீரில் சிக்கிக்கொண்டு தவித்தனர். இந்தமழைக்கு வட்டாட்சியர் அலுவலகம் பகுதியில் சாலையோரமிருந்த மரம் ஒன்று வேருடன் சாய்ந்தது. அதேபோல் மதுரை-ராமேசுவரம் செல்லும் சாலை மணிநகர் பகுதியில் சாலையோரம் இருந்த மரம் சாய்ந்து போக்குவரத்து தடை ஏற்பட்டது. அப்பகுதியில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று சாய்ந்த மரத்தை அப்புறப்படுத்தினர்.

நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதை கண்டு மனம் வருந்திய பொதுமக்களுக்கு தற்போது பெய்த கோடைமழை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளதாக நகர்ப்புறமக்களும், கிராமங்களில் மிளகாய் பருத்தி சாகுபடி செய்த விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

**பப்பாளி உற்பத்தியில் பலே சாதனை!**

**மேட்டுப்பாளையம்,**

பப்பாளி சாகுபடியில் இதுவரை ஒரு மரத்தில் 80 கிலோ உற்பத்தி தான் அதிகபட்சமாக இருந்து வந்த நிலையில், இயற்கை முறை வேளாண் உற்பத்தி மூலமாக தங்கள் பண்ணை மரத்தில் 130 கிலோ பப்பாளியை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது, மேட்டுப்பாளையம் ஈடன் நர்சரி கார்டன்ஸ்.

இந்த சாகுபடி குறித்து ஈடன் நர்சரி கார்டன்ஸ் உரிமையாளர் எஸ்.ராஜரத்தினம் கூறியது:

விவசாயிகளுக்குத் தேவைப்படும் அனைத்து வகை நாற்றுக்களை உற்பத்தி செய்வதை நோக்கமாக கொண்டு, நாற்று உற்பத்தியில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தி, புதிய தலைமுறை விவசாயத்தில் சிறந்த மாதிரிப் பண்ணையாகவும் எங்கள் நர்சரி செயல்பட்டு வருகிறது. 1998-இல் துவக்கப்பட்ட இப் பண்ணையில் பல்வேறு வகையான மலர், மர, பழ நாற்றுக்களும் உற்பத்தி செய்யப்பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நாற்று உற்பத்தியில் இதுவரை விதை, கட்டிங், மண் பதியம், விண் பதியம், ஒட்டு கட்டுதல், மொட்டு கட்டுதல், திசு வளர்ப்பு முறைகளில் மட்டுமே நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. ஆனால், எங்கள் நர்சரியில் 8-ஆவது முறையாக இலைகள் மூலமாக நாற்று உற்பத்தி செய்யும் முறையை அறிமுகப்படுத்தி சாதனை படைத்துள்ளோம். தற்போது மலைவேம்பு நாற்றுக்களும் லட்சக்கணக்கில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் உள்பட ஆந்திரம், கர்நாடக மாநில விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வருகிறோம்.

உரிய ஆதாயம் கிடைக்காமல், விவசாயத் தொழிலே அழிந்துபோகும் நிலையிலுள்ள இன்றைய காலகட்டத்தில் விவசாயிகளுக்கு குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் பப்பாளி சாகுபடியை அறிமுகப்படுத்தி வருகிறோம். இதற்கு இரு வருட விளைச்சலில் சிறந்த ஆதாயம் தரும், ரெட்லேடி ரக பப்பாளி நாற்றுக்களைத் தேர்வு செய்து எங்கள் பண்ணையிலேயே சோதனை முறையில் சாகுபடி செய்து வருகிறோம். இதற்கென சிறந்த மண் வளம் கொண்ட ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 900 பப்பாளி நாற்றுக்களை 7-க்கு 7-அடி இடைவெளியில் நடவு செய்து, நன்கு மக்கிய ஆட்டு எருவையும், வேப்பம் புண்ணாக்கையும் கலந்து உரமாக இட்டு, இயற்கை முறை வேளாண்மை மூலமாக பயிர் செய்து வருகிறோம். நடவு செய்த 6-ஆவது மாதத்திலேயே இந்த பப்பாளி நல்ல விளைச்சல் தரக்கூடியது. 10 நாளைக்கு ஒருமுறை அறுவடை செய்தால் போதும். 2-ஆம் வருட இறுதியில் அதிகபட்சமாக மரத்திற்கு 130 கிலோ வரை பப்பாளி விளைச்சல் கிடைக்கும். இதற்கு தண்ணீர் செலவும் அதிகமில்லை. மண்ணின் தன்மைக்கேற்ப 7-10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும்.

தற்போது ரெட்லேடி ரக பப்பாளியை பயிர் செய்ய தமிழக விவசாயிகள் மட்டுமின்றி கேரள பகுதி விவசாயிகளும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கென கேரள பகுதிகளிலிருந்து வரும் விவசாயிகள், பண்ணையில் பப்பாளி சாகுபடியை நேரில் பார்வையிட்டு, நாற்றுக்களை வாங்கிச் செல்கின்றனர். தற்போது ஆத்தூர், திருவள்ளூர், கோவை, மேட்டுப்பாளையம், கோட்டயம், பாலக்காடு பகுதிகளில் 300 ஏக்கரில் விவசாயிகள் ரெட் லேடி பப்பாளியை பயிர் செய்து வருகின்றனர். இரண்டு வருடம் விளைச்சலைத் தரும் இந்தப் பப்பாளியை பயிரிட முதல் வருடம் ரூ.35,000, 2-ஆம் வருடம் ரூ.25,000 என மொத்தம் ரூ.60,000 வரை முதலீடு செய்தால், இறுதியில் செலவினங்கள் போக, ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை நிகர லாபம் பெறலாம் என்றார் அவர்.

## வெள்ளக்கோவில், முத்தூர் பகுதிகளில் மிதமான மழை

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில், முத்தூர் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மிதமான மழை பெய்தது.

கடந்த இரண்டு நாள்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை காற்று இல்லாமல் மிதமான மழை பெய்தது.

தற்போது துவங்கியுள்ள அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம், இம்மழையால் சற்றுக் குறைந்துள்ளது. மங்கலப்பட்டி, பழனிக்கவுண்டன்வலசு, ஓலப்பாளையம், காடையூரான்வலசு, புதுப்பை மற்றும் மூலனூர் பகுதிகளிலும் ஓரளவு மழை பெய்துள்ளது.

## தருமபுரி, கிருஷ்ணகிரியில் பரவலாக மழை

***கிருஷ்ணகிரி/தருமபுரி,***

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செவ்வாய்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த 10 நாள்களாக கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வெயில் 100 டிகிரியை கடந்து சுட்டெரித்தது.

இந்த நிலையில், கத்திரி, வெயில் தொடங்கிய நிலையில் தருமபுரியில் வெயிலின் தாக்கம் மேலும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கடந்த இரு நாள்களாக பகல் நேரங்களில் வெயிலின் அளவு சற்று குறைந்தது. தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை நண்பகல் வானம் பரவலாக மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

மாலை நேரத்தில் சுமார் 3 மணி நேரத்துக்கும் மேல் பரவலாக சாரல் மழை பொழிந்தது. பின்னர், மாவட்டம் முழுவதும் பரவலாக இரவு 8.30 மணியளவில் பெய்யத் தொடங்கிய மழை சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தது. இதில், பென்னாகரத்தில் சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. திடீரென பெய்த மழையால் வெப்பம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது. கிருஷ்ணகிரியிலும் பரவலாக மழை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கோடையின் வெப்பம் அதிகமாக இருந்த நிலையில் செவ்வாய்க்கிழமை மேக மூட்டத்தால் பகலில் வெப்பம் குறைவாகவே இருந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு கிருஷ்ணகிரியில் பலத்த மழை பெய்தது. ஒரு மணி நேரம் பெய்த மழையால் நகரின் சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சாலைகளில் பள்ளமான பகுதியில் மழைநீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர்.

மாவட்டத்தில் ஒசூர், காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி, பர்கூர், வேப்பனஅள்ளி, குந்தாரப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. மா விவசாயிகள் மகிழ்ச்சி:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவிய கோடை வெப்பத்தால் முதிர்ச்சி அடையும் நிலையில் இருந்த மாங்காய்கள் அதிக அளவில் உதிரத் தொடங்கின. இதனால், விவசாயிகள் கோடை மழையை எதிர்பார்த்திருந்தனர்.

இந்த நிலையில், மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ததால், மா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கிருஷ்ணகிரியில் திடீர் மழையால் நகரில் சில பகுதிகளில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதனால், நகர்ப் பகுதி இருளில் மூழ்கியது.

**நாமக்கல்லில் பலத்த மழை**

**நாமக்கல்,**

நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால் வெயிலின் தாக்கம் குறைந்தது. பரவலாக வெயில் கடுமையாக உள்ளபோதும் மே 1- ஆம் தேதி முதல் 5 நாள்கள் இந்த மாவட்டத்தில் 190.7 மிமீ மழை பதிவாகியுள்ளது. கத்திரி வெயில் தொடங்கிய நிலையில், வெயின் தாக்கம் மிக அதிகமாக இருந்து வந்தது.

நிகழாண்டில் கத்திரி வெயில் தொடங்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே நாமக்கல் மாவட்டத்தில் 100 டிகிரிக்கும் அதிகமாகவே வெயில் பதிவாகி வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்திரி வெயில் தொடங்கிய நிலையில், வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பரவலாக நல்ல மழை பெய்தது.

இதையொட்டி, காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், வெப்ப அளவுகளும் குறைந்திருந்தது.

தொடர்ந்து, பிற்பகல் 3 மணியளவிலும், 5 மணியளவிலும் பரவலாக நல்ல மழை பெய்தது. தலா சுமார் 30 நிமிஷங்கள் பெய்த இந்த பலத்த மழையால், நாமக்கல் நகரில் ஆங்காங்கே சாலையில் மழைநீர் தேங்கியது.

மழையை அடுத்து குளிர்ந்த காற்று வீசியது.

பிற பகுதிகளில் கோடை காலம் தொடங்கி வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளபோதும், இந்த மாவட்டத்தில் கடந்த மே 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை பரவலாக மொத்தம் 190.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

இதில், அதிகபட்சமாக ராசிபுரத்தில் 72.40 மி.மீ. மழையும், குறைந்தபட்சமாக புதுச்சத்திரம், மங்களபுரத்தில் தலா 5 மி.மீ.

மழையும் பதிவாகியுள்ளது.

நாமக்கல்லில் மொத்தம் 25 மி.மீ. மழை பெய்திருப்பதாக வானிலை ஆய்வு மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இத்துடன், அடுத்த மூன்று நாள்களுக்கு நல்ல மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.22, சென்னையில் ரூ.3.57. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.68, முட்டைக் கோழி கிலோ ரூ.50.

## மூன்று நாள்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு

**நாமக்கல்,**

தற்போதைய வானிலை அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த மூன்று நாள்களும் மழை பெய்யும் வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களில் (மே 7 முதல் 9-ஆம் தேதி வரை) வானம் புதன்கிழமை பெருமளவு மேகமூட்டதுடனும், மற்ற இரு நாள்கள் பொதுவாக மேகமூட்டத்துடனும் காணப்படும். இந்த மூன்று நாள்களில் மாவட்டம் முழுவதும் 8 மி.மீ. முதல் 20 மி.மீ. வரை மழை பெய்யக்கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கி.மீ. முதல் 7 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு, தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 69.8 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 89.6 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 65 சதம் முதல் அதிகபட்சம் 95 சதம் வரை இருக்கும். கோழிப்பண்ணையாளர்களுக்கு..: தற்போதைய வானிலை அடிப்படையில் தொடர்ந்து காணப்படும் மேகமூட்டம், மழையின் காரணமாக வெப்ப அளவுகளை குறைந்து காற்றின் வேகம் உயர்ந்தும். இது கோழிகளிடையே தீவன எடுப்புக்கு சாதகமான சூழ்நிலையாக அமையும். பரவலாக முட்டை உற்பத்தி 5 முதல் 8 சதம் குறைந்து காணப்பட்ட நிலை அடுத்த மூன்று நாள்களில் நிலவும் வானிலையில் மாறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனினும், வெப்ப அளவுகள் அதன்பிறகு

உயரும் நிலை காணப்படும் என்பதால் கோடைகால பராமரிப்பு முறைகளை பின்பற்றி வர வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு...:

தற்போது பெய்துள்ள மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் மானாவரிப் பயிராக வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய நிலக்கடலை கோ-6 ரக நடவு செய்யலாம். இந்த விதையை ஒரு ஏக்கருக்கு 55 கிலோ பயன்படுத்த வேண்டும்.

தவிர, ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் டிரைகோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்து பிறகு விதைப்பு மேற்கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்செங்கோட்டில் ரூ. 37 லட்சத்துக்கு எள் விற்பனை

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை ரூ. 37 லட்சத்துக்கு எள் விற்பனையானது.

கடந்த 2013-14-ஆம் ஆண்டு இந்தச் சங்கத்தின் மூலம் ரூ 6.27 கோடிக்கு எள் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது எள் அறுவடைப் பருவம் என்பதால் செவ்வாய்க்கிழமைகளில் ஏல விற்பனை நடைபெறுகிறது.

இதற்காக சேலம், நாமக்கல், ஈரோடு, விழுப்புரம், ஆத்தூர், தலைவாசல், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, அந்தியூர், பவானி, கரூர் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் எள் மூட்டைகளைக் கொண்டு வந்தனர்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற எள் ஏல விற்பனைக்கு 520 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. வெள்ளை எள் கிலோ ரூ. 126 முதல் ரூ. 135 வரை விற்பனையானது. சிவப்பு எள் கிலோ ரூ. 70 முதல் ரூ. 81 வரையும், கருப்பு எள் கிலோ ரூ. 90 முதல் ரூ. 103 வரையும் விற்பனையானது.

விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

மேற்கண்ட தகவலை சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

## <u>சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் பெற விண்ணப்பிக்கலாம்</u>

**கரூர்,**

நொய்யல் ஆற்று சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணத் தொகை பெற ஜூன் 26-க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் நொய்யல் ஆற்றில் சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்க நில உரிமையாளர்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நொய்யல் ஆற்று மற்றும் வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கம் மற்றும் தனி நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் மீது ஆணைப்பிறப்பித்த உயர்நீதிமன்றம், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் இருந்து மனுக்கள் பெறுவதற்கு ஜூன் 26-ம் தேதி வரை காலக்கெடுவை நீட்டித்து ஆணையிட்டுள்ளது.

எனவே நொய்யல் ஆற்றின் சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், பாதிப்புக்குள்ளான நிலங்களின் சர்வே எண்களை குறிப்பிட்டு நிவாரணம் கோரி மனுக்களை சுற்றுச்சூழலியல் தடுப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையம் 148, 298 பீட்டர்ஸ் சாலை சென்னை என்ற முகவரிக்கு ஜூன் 26-ம் தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

ஏற்கெனவே மனு அளித்த விவசாயிகள் மீண்டும் மனு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

## <u>தொடர் மழை; விவசாயிகள் மகிழ்ச்சி</u>

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடரும் கோடை மழையால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக அணைக்கரை பகுதியில் 52 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடலில் உருவான

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடந்த 3 நாட்களாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கடும் வெயிலின் தாக்கத்திலிருந்த மக்களுக்கு, இந்த மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து மக்கள் குளுமையை அனுபவித்து வருகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டத்திலும் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. டெல்டா மாவட்டமான தஞ்சாவூரில் பெய்து வரும் மழையால், கோடை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் சிறிது ஆறுதல் அடைந்துள்ளனர். மாவட்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியோடு முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

கல்லணை 22, திருக்காட்டுப்பள்ளி 17.2, திருவையாறு 35.2, தஞ்சாவூர் 3.4, அய்யம்பேட்டை 8, பாபநாசம் 25, கும்பகோணம் 15, அணைக்கரை 52, நெய்வாசல் தென்பாதி 3, பூதலூர் 13, பேராவூரணி 7.2, அயங்குடி 4.2, நாகுடி 12, பட்டுக்கோட்டை 2, வல்லம் 3 மில்லிமீட்டர் அளவு மழை பெய்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழையால், கோடை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெரம்பலூரில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக பெய்து வரும் கோடை மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழை பெய்யாததால் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், பருத்தி, வெங்காயம், கரும்பு, மக்காசோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கடந்த சில தினங்களாக கோடை வெயிலின் வேகத்தை தாங்கமுடியாமல் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், கடந்த 4-ம் தேதி முதல் அக்னி நட்சத்திரம்

தொடங்கியதிலிருந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர் காற்று வீசியது.

திங்கள்கிழமை காலை முதல் பெரம்பலூர் நகர் பகுதியை தவிர மாவட்டத்தின் பல்வேறு கிராமப்புறங்களில் பரவலான மழை பெய்தது. அதன்படி, திங்கள்கிழமை காலை 8 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை செட்டிக்குளம் பகுதியில் 10 மில்லி மீட்டரும், பாடாலூர் பகுதியில் 23 மில்லி மீட்டரும் பழையளவு பதிவாகியுள்ளது. இதேபோல, பெரம்பலூர் உள்பட மாவட்டத்தின் பெரும்பாலான கிராமப்புறங்களில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பலத்த மழை பெய்தது. இதனால், மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதோடு, பெரும்பாலான விவசாயிகள் கோடை உழவுப் பணிக்கு தயாராகி வருகின்றனர்.

## கோடை உழவு செய்து பயன் பெறலாம்

**பெரம்பலூர்,**

கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்து பயன் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து வருகிறது.

இந்த மழையை பயன்படுத்தி அனைத்து விவசாயிகளும் கோடை உழவு செய்து பயன் பெறலாம்.

கோடை உழவு செய்வதன் மூலம் மேல் மண், கீழ் மண்ணாகவும், கீழ் மண் மேல் மண்ணாகவும் மாற்றப்படுவதன் மூலம் தொடர்ந்து சாகுபடி செய்யப்படும் பயிர்கள் செழிப்பாக வளரும்.

விவசாயிகள் தங்களது கிணறுகளில் உள்ள நீரைக்கொண்டு குறுகிய கால வயதுடைய தோட்டக்கலைப் பயிர்களான கீரை வகைகள், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறி பயிர்களை சாகுபடி செய்து வருவாய் பெறலாம் என்றார் அவர்.

## திருவாரூரில் 2-வது நாளாக மழை

**திருவாரூர்,**

திருவாரூரில் 2-வது நாளாக செவ்வாய்க்கிழமை மழை பெய்தது.

கத்தரி வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில், வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 5 மணி முதல் பரவலாக மழை பெய்தது.

திங்கள்கிழமை மதியத்துக்குப் பிறகு மழை நின்றுவிட்டாலும், தொடர்ந்து லேசான குளிர்ந்த காற்று வீசியவாறு இருந்தது. நள்ளிரவு மற்றும் செவ்வாய்க்கிழமை காலை விட்டுவிட்டு மழை பெய்தது.

முத்துப்பேட்டையில் 58 மிமீ: திருவாரூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்):

முத்துப்பேட்டை - 58, திருத்துறைப்பூண்டி - 24, திருவாரூர் - 23, நன்னிலம் - 20.2, குடவாசல் - 16, வலங்கைமான் - 12.3, பாண்டவையாறு தலைப்பு - 9.6, நீடாமங்கலம் - 6.2, மன்னார்குடி 6.

## குமரி மாவட்டத்தில் பலத்த மழை

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை தொடர்ந்து 6 மணி நேரம் மழை பெய்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து அங்கு குளிக்க தடை விதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தென்மாவட்டங்களில் மழை நீடித்து வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு லேசாக பெய்யத் தொடங்கிய மழை, பின் பிற்பகல் 2 மணி வரை கனமழையாக நீடித்தது. இதனால் பாசனக் கால்வாய்களில் தண்ணீர் அதிகளவில் வந்து கொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறை அணையில் 9 மி.மீ., மழையும், பெருஞ்சாணியில் 6.4 மி.மீ., சிற்றாறு-1-ல் 26.4 மி.மீ., சிற்றாறு-2-ல் 41.6 மி.மீ., பொய்கை 10.9 மி.மீ., இரணியல் 14.2 மி.மீ., சுருளோடு 2 மி.மீ., கன்னிமார் 1.2 மி.மீ., குளச்சல் 46.4 மி.மீ., அடையாமடை 15 மி.மீ., கோழிப்போர்விளை 36 மி.மீ., திருவட்டார் 52 மி.மீ., முள்ளங்கினாவிளை 34 மி.மீ., புத்தன்அணை 7 மி.மீ., திற்பரப்பு 36.7 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

இந்த மழையினால் பேச்சிப்பாறை அணைக்கு நொடிக்கு 69 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு நொடிக்கு 36 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறை அணையின் தற்போதைய நீர்மட்டம் 16.50 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 37.75 அடியாகவும் உள்ளது.

குலசேகரம்: குமரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மலையோரப் பகுதிகளில் பெய்த கன மழை காரணமாக ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடியது.

குறிப்பாக மலையோரப் பகுதிகளான ஐத்துளி, வெள்ளச்சிப்பாறை, ஆறுகாணி, கற்றுவா, பேச்சிப்பாறை, சுருளகோடு, தடிக்காரன் கோணம், கீரிப்பாறை உள்ளிட்ட இடங்களிலும், அதைச் சார்ந்த மலைப் பகுதிகளிலும் மழை தீவிரமாக இருந்தது.

இதனால் முக்கிய ஆறுகளான கோதையாறு, பரளியாறு, தாமிரவருணி, பழையாறு உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடியது.

திற்பரப்பு அருவியில் குளிக்கத் தடை: இந்த மழையினால் திற்பரப்பு அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் அருவியில் குளித்துக் கொண்டிருந்த மக்கள், அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து குளிப்பதற்கு பேரூராட்சி சார்பில் தடை விதிக்கப்பட்டது. கோடை விடுமுறையையொட்டி இங்கு வந்த சுற்றுலாப் பயணிகள் குளிக்க முடியாமல் வெள்ளப்பெருக்கை ரசித்துப் பார்த்து விட்டு திரும்பிச் சென்றனர்.

தொழிலாளியின் வீடு இடிந்தது: மழை காரணமாக திருவட்டாறு அருகே மாத்தாறு பகுதியில் சார்லஸ் என்ற தொழிலாளியின் மண்வீடு இடிந்து சேதமடைந்தது.

களியக்காவிளை: களியக்காவிளை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் சுமார் 2 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை கொட்டியது. இப்பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் தொடர் மழையால் இப்பகுதி கிணறுகளிலும், குளங்களிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

வீட்டின் சுவர் இடிந்தது: தொடர் மழையால் களியக்காவிளை, காளைச்சந்தை ஆர்.சி. தெரு பகுதியைச் சேர்ந்த மேபல் என்பவருக்குச் சொந்தமான குடிசை வீட்டுச் சுவர் திங்கள்கிழமை இடிந்து விழுந்து சேதமடைந்தது. மேலும் மின் கசிவு காரணமாக இவ் வீட்டிலுள்ள தொலைக்காட்சிப்பெட்டி உள்ளிட்ட மின்சாதனங்களும் சேதமடைந்தன.

கருங்கல்: கருங்கல் மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் பெய்த பலத்த மழையால் குளங்களில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 2 நாள்களாக கருங்கல், பாலப்பள்ளம், நட்டாலம், மிடாலம், மேல்மிடாலம், தேங்காய்ப்பட்டினம், மார்த்தாண்டம்,விரிகோடு, உண்ணாமலைக்கடை, இரவிபுதூர்கடை, ஞாறான்விளை உள்ளிட்ட பகுதிகளில் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு தொடங்கிய மழை, இப்பகுதிகளில் தொடர்ந்து நீடித்தது. இதனால் கருங்கல், மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள நட்டாலம் மதுரைகுளம், கொக்குறுனிகுளம், பப்புரான்குளம், சிங்கினிகுளம், பாலூர்குளம், வால்குளம், தொடவாய்குளம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட குளங்களில் நீர்வரத்து பெருகியுள்ளது.

## சேர்வலாறு அணைப் பகுதிகளில் பலத்த மழை

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 15 அடி உயர்ந்துள்ளது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மானூர், பேட்டை, சுத்தமல்லி, சேரன்மகாதேவி, கல்லிடைக்குறிச்சி, தென்காசி, வள்ளியூர், சங்கரன்கோவில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மிதமான மழை பெய்தது. தொடர்ச்சியாகப் பெய்த மழையால் குளிர்ச்சியான சூழல் நிலவியது.பிற இடங்களிலும் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): பாபநாசம் அணை 8,

சேர்வலாறு அணை 40, கடனாநதி அணை 5, ராமநதி அணை 12, கருப்பாநதி அணை 17, குண்டாறு அணை 31, அடவிநயினார் அணை 10, நம்பியாறு அணை 2. தென்காசி 27, செங்கோட்டை 21, பாளையங்கோட்டை 11.6, திருநெல்வேலி 10, அம்பாசமுத்திரம் 3, சேரன்மகாதேவி 2, கன்னடியன் அணைக்கட்டில் 2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

## தொடர் மழை: லால்பேட்டையில் 60 மி.மீ பதிவு

**கடலூர்,**

கடலூரில் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக நீடித்து வந்த மழை செவ்வாய்க்கிழமை பகலில் ஓய்ந்திருந்தது.

திங்கள்கிழமை காலை 8 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை மாவட்டத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் லால்பேட்டையில் 60 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழையளவில், கடலூரில் மட்டும் 60 மி.மீ. மழை பதிவாகியிருக்கிறது.

மொத்தம் 458 மி.மீ. மழையும், சராசரியாக 21.82 மி.மீ. மழையும் பதிவாகியது. மற்ற பகுதிகளில் பதிவான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்): காட்டுமன்னார்கோயில் 53, சேத்தியாத்தோப்பு 50, கடலூர் 48.90, புவனகிரி 42, ஸ்ரீமுஷ்ணம் 40, குப்பநத்தம், பெலாந்துறை 31, கொத்தாவாச்சேரி 27, மே.மாத்தூர் 25, அண்ணாமலைநகர் 21.20, பரங்கிப்பேட்டை 13.

மீனவர்கள் 2-வது நாளாக கடலுக்குச் செல்லவில்லை: கடலூர் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாகப் பெய்து வந்த தொடர் மழையால், கடல் சீற்றத்துடன் காணப்பட்டது.

இதனால் மீனவர்கள் யாரும் 2-வது நாளாக கடலுக்குச் செல்லவில்லை. மீன்பிடி தடைகாலம் என்றபோதிலும் பைபர் படகுகளில் கடலுக்குள் செல்லும் மீனவர்களும், தொழிலுக்குச் செல்லவில்லை.

**விழுப்புரத்தில் கன மழை**

**விழுப்புரம்,**

விழுப்புரத்தில் செவ்வாய்க்கிழமை இரவு கனமழை பெய்தது. இம் மழையைத் தொடர்ந்து திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சென்ற வாகனங்கள் மெதுவாகச் சென்றன. கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம், பஸ் நிலையம் உள்பட பல்வேறு தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்துள்ள விவசாயிகள், தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்பட்டு வந்த நிலையில், இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோடையில் பலன் தரும் எள் சாகுபடி**



எள் எல்லாவித மண்ணிலும் விளைச்சல் தரவல்லது. தமிழ்நாட்டில் அதிகப் பரப்பளவில் எள் சாகுபடி செய்ய முடியும். எள் அடுமனை (பேக்கரி) பொருட்கள் தயாரிப்பில் வாசனை மற்றும் அழகுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு எள் விதையை மணலுடன் கலந்து சீராக தூவி விதைத்தால் ஒரு கிலோ விதை போதுமானதாக இருக்கும். மதுரையைச் சேர்ந்த எ.எஸ்.தர்மராஜன்

விவசாயிகள் விவசாயிகளின் தந்தை என்று சொல்வார்கள். தர்மராஜன் பசுமைக்குடில்களில் என்ன பயிர் சாகுபடி செய்வது என்பது பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறி வருகிறார். எதிர்காலத்திற்கு மிகவும் ஏற்றது. விவசாயிகள் ஒரு கிலோ எள் விதையை சாமர்த்தியமாக விதைக்கலாம். நிலத்திற்கு கடைசி உழவின்போது ஏக்கருக்கு 5 டன் நன்கு மக்கிய தொழுவுரம், யூரியா 31 கிலோ, சூப்பர் 56 கிலோ இட வேண்டும். சாகுபடி நிலம் ரவை உப்புமா பதத்தில் இருக்கும்போது எள் விதைக்க வேண்டும். ஆனால் ஏர் மாடுகளின் குளம்புகளில் அல்லது கலப்பையில் மண் ஒட்டக் கூடாது. எள் விதையினை விதைத்த பிறகு நிலத்தில் முள் செடி அல்லது படல் கொண்டு இழுத்து விதையை பூமியில் அழுத்தும்படி செய்து மேல் மண் மூடும்படி செய்ய வேண்டும். நிலத்தை கடைசி உழவு செய்யும்போது மக்கிய தொழு உரம் 5 டன் அளவு இடுவது அவசியம். இறவை பயிருக்கு அடியுரமாக யூரியா 30 கிலோ மேலுரமாக விதைத்த 20-25 நாளில் 8 கிலோ யூரியாவும் 30 -35 நாளில் 7 கிலோ யூரியாவும் இட வேண்டும். ஏக்கருக்கு 15 கிலோ மாங்கனீஸ் சல்பேட் இட வேண்டும். எள் செடியில் ""எக்கடையான்" சாற்றினை உறிஞ்சி விடுகின்றது. ஒருவித வைரஸ் நோய் வரும். உடனே அதை விஞ்ஞானிகளின் சிபாரிசினை கேட்டு ஆவண செய்ய வேண்டும். இறவை எள் சாகுபடிக்கு கிடைக்கும் நீர் மற்றும் நிலத்தின் சரிவைப் பொறுத்து 10 அல்லது 20 சதுர மீட்டர் அளவிற்கு சமப்படுத்தி விட வேண்டும். விதையின் மூலம் பரவும் வாடல், இலைப்புள்ளி நோய்களைத் தடுக்க இரண்டு கிலோ விதையுடன் 4 கிராம் மருந்தை கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். இது மாதிரியான செயல்களை பூஞ்சாள வியாதிகளைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

*அறுவடை :* செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள காயில் உள்ள விதைகள் கருப்பாக வந்தால் உடனே அறுவடை செய்ய வேண்டும். இது சமயம் காய்கள் வெடிக்காமல் இருக்க ஆவண செய்ய வேண்டும். இதைத் தடுக்க செடிகளை அறுவடை செய்து அம்பாரம் போட வேண்டும். செடிகளை தலைகீழாக மூன்று நாட்களுக்கு அம்பாரத்தில் வைக்க வேண்டும். பிறகு அம்பாரத்தை பிரித்து செடிகளை உலர்த்தி காய்களை வெடிக்க விட வேண்டும். செடிகளைத் தட்டி எள்ளினை எடுக்கலாம்.

*மகசூல் :* ஏக்கரில் 350 கிலோவிற்கு குறைவில்லாமல் மகசூல் பெறலாம். இந்த மகசூலினை 90 நாட்களில் பெறலாம். இந்த விவரங்களை தர்மராஜன் மனப்பாடமாக எள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விவரமாக சொல்லி வருகிறார்.

*பாசனம் :* எள்ளுக்கு அதிக நீர் தேவையில்லை. அஞ்சிலே ஒரு தண்ணீர், பிஞ்சிலே ஒரு தண்ணீர் கொடுக்க வேண்டும்.
எள் விவசாயிகள் 90 நாட்களில் கணிசமான அளவு லாபம் எடுக்கின்றனர். கோடையில் கடும் உழைப்பில் ஈடுபடும் ஆண், பெண் விவசாயிகள் எள் சாகுபடி செய்வதையே விரும்புகின்றனர். விவசாயிகள் ஆராய்ச்சி நிலையங்களில் கிடைக்கக்கூடிய சிறந்த எள் ரகங்களை வாங்கி சாகுபடி செய்து பயன் அடையலாம்.
**- எஸ்.எஸ்.நாகராஜன்.**

**சின்ன சின்ன செய்திகள்**



*புதிய நெல் ரகம் "திருப்பதி சாரம் 5' :*தமிழகத்தில் தென் மாவட்டங்களில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த இரகம் கார் பிந்தய பாசனப் பருவங்களில் பயிரிட ஏற்றது. இந்த இரகம் ஒரு எக்டருக்கு சராசரியாக 6300 கிலோ விளைச்சலைத் தருகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்டு பயன்பாட்டில் உள்ள அம்பை 16 இரகத்தை விட 14 விழுக்காடு அதிக விளைச்சலைத் தரும். விதைத்த 118 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் இந்த இரகம் தண்டு துளைப்பான், இலை சுருட்டுப்புழு புகையான் ஆகிய பூச்சிகளுக்கு மிதமாக எதிர்ப்புத்திறன் கொண்டது.

இந்த இரகத்தின் அரிசி குறுகிய வடிவில் தடிமனானது. அமைலோஸ் அரிசியில் இடைப்பட்ட நிலையில் உள்ளதால் சமைக்க உகந்தது. மேலும் நல்ல அறவைத்திறன் கொண்டது. நாமக்கல் மாவட்டத்தில் சோதனை முறையில் பயிரிடப்பட்ட போது 11,567 கிலோ விளைச்சலைத் தந்துள்ளது. மேலும் விபரங்களுக்கு தொடர்பு *முகவரி:* இயக்குநர், பயிர்பெருக்க மரபியல் மையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422 - 661 1215.

*வாழையில் எர்வினியா கிழங்கு அழுகல்நோய் :* நுண்ணுயிர் கிருமியான பாக்டீரியா (எர்வினியா கரட்டோவோரா) வாழையில் கிழங்கு அழுகல் நோய் ஏற்படுவதற்கு முக்கிய நோய்க்காரணியாக உள்ளது. இந்த நோயின் தாக்கம் திசுவளர்ப்பு வாழையில் (ஜி 9 ) அதிகமாக காணப்படுகிறது. கிழங்கு அழுகல் தாக்கப்பட்ட வாழையின் நடுக்குருத்து அழுகி வளர்ச்சி குறையும். அதற்கு சற்று முன்னால் தோன்றிய இலை தண்டு பகுதியினுள் சொருகியது போன்று காணப்படும். நோய் தாக்கப்பட்ட மரத்தினை காய்த்த தண்டுப்பகுதி கிழங்கிலிருந்து பிரிந்து கீழே விழும். கிழங்கு மட்டும் மண்ணிலேயே இருக்கும். கிழங்கானது அழுகி ""பார்மலின்" நாற்றத்தைக் கொண்டிருக்கும்.

*நோய் மேலாண்மை :* நடவு செய்வதற்கு தேவையான வாழைக்கன்றுகளை நோய் தாக்கப்படாத தோட்டங்களிலிருந்து தேர்வு செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம், வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை நிலத்தில் இட்டு மண்ணின் வளத்தை மேம்படுத்த வேண்டும். கோடைக்காலத்தில் 3 முதல் 4 முறை நீர்ப்பாய்ச்சியும் குளிர் காலத்தில் நீர் தேங்காதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். சணப்பை ஊடுபயிராக வளர்ந்து வாழை பூப்பதற்கு முன் உழுது விட வேண்டும். இரண்டு முதல் 5 மாதம் வரை மாதம் ஒருமுறை பிளீச்சிங் பவுடர் 2 முதல் 6 கிராம் வீதம் மண்ணில் இட்டு நீர்பாய்ச்ச வேண்டும். வாழைக்கன்றை காப்பர்ஆக்ஸி குளோரைடு 4 கிராம் / லிட்டர் ஸ்ட்ரெப்டோசைக்ளின் 0.3 கிராம் / லிட்டர் வீதம் அதாவது காலையில் 45 நிமிடம் வரை ஊறவைத்து அதன் பின்பு நடவு செய்ய வேண்டும். இதே கலவையை நடவு செய்த முதல் மாதம் கழித்து கிழங்கினைச் சுற்றி ஊற்ற வேண்டும்.

பருவ காலத்தில் உயிர்க்கட்டுப்பாட்டு காரணியான சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கரைசலை 3 முறை வாழைக்கு அளிக்க வேண்டும். வாழை நடவு

செய்த பின், ஒரு வாழைக்கன்றுக்கு நுண்ணுயிர் கட்டுப்பாட்டு காரணியான டிரைக்கோடெர்மா விரிடி 50 கிராம் வீதம் நடவு செய்த 2 மம் 4 மாதங்களுக்கு பின்பு இட வேண்டும். (தகவல் : முனைவர் செ.தங்கேஸ்வரி, முனைவர் எஸ்.கே.மனோரஞ்சிதம், தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர், பொள்ளாச்சி. போன்: 04253 - 288 722).

*வீரிய ஒட்டு சிகப்பு தீவனச் சோளம் :* மற்றும் ஐஸ்வர்யா சன்னரக நெல், ஜெயந்தி அதி சன்னரக நெல் மற்றும் பொதுவான ADT மற்றும் ஆந்திர நெல்லூர், ரக விதைகளும் BPT போன்ற சான்றிதழ் பெற்ற எல்லா நெல் விதைகளும் வாங்க தொடர்பு முகவரி : ஸ்ரீகிருஷ்ணா சீட்ஸ், WCR பிளாட் நம்பர் 13A, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், செல்லாயி அம்மன் கோயில் அருகில், துவாகுடி, திருச்சி-625 015. போன்: 75988 77573.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## மானாவாரியில் மாற்றுப்பயிர் சாகுபடி - அனுபவ விவசாயி

எங்களது நிலம் அருப்புக்கோட்டை அருகே நாகலாபுரம் அருகில் சின்னலநாயக்கன்பட்டி கிராமம். இப்பகுதி பெரும்பாலும் வானம் பார்த்த பூமி நிலமாகத்தான் உள்ளது. எனது தந்தை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே மாற்று விவசாயம் செய்ய எண்ணி அப்பகுதியில் முதன் முதலில் மக்காச்சோளத்தை பயிர் செய்து அதில் அமோக விளைச்சல் கண்டார்.

எனது தந்தை காலமான பின் நான் சிறிது காலம் தோட்டத்தை கட்டு குத்தகைக்கு விட்டேன். அவர்கள் நிலத்தை பராமரிப்பு சரியாக செய்யாததால் நானே விவசாயத்தை நடத்த முன் வந்தேன்.

முதலில் விவசாயத் துறையில் மானியத்தில் சொட்டுநீர்ப்பாசனம் அமைத்து அதில் மிளகாய் சாகுபடி செய்தேன்.

அதில் வேலை ஆட்கள் பற்றாக்குறையும், மழை இல்லாததாலும், தண்ணீர் பற்றாக்குறையினாலும் மிகுந்த நஷ்டம் அடைந்தேன். மாற்று விவசாயம் என்ன செய்யலாம் என்று எண்ணி இருந்த போது தினமலர் விவசாயப் பகுதியில் சிவகாசியைச் சேர்ந்த விவசாயி கரிசல் மண்ணில் சவுக்கு மரம் சாகுபடி செய்து சாதனை செய்ததை படித்தேன்.

பிறகு நேரில் சென்று அவரிடம் விளக்கம் கேட்டு நானும் எனது தோட்டத்தில் சுமார் 13 ஏக்கரில் 40,000 சவுக்கு மரக்கன்றுகளை நடவு செய்தேன். 1 1/2 ஏக்கரில் 600 தேக்கு மரக்கன்றுகளையும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நடவு செய்தேன்.

இடையிடையே உள்ள காலி இடங்களில் 20 மலைவேம்பும், 30 நாட்டு வேம்பும், 10 மகா கனியும், 10 குமிழ் தேக்கும் நடவு செய்துள்ளேன்.

இப்போது தேக்கு மரமும், சவுக்கு மரமும் சுமார் முப்படி அடி உயரம் வளர்ந்து உள்ளது. 8X8 தேக்கு மரம் இடையே இரண்டு மாதத்திற்கு முன் மரவள்ளி கிழங்கு குச்சிகளை சுமார் 1500 குச்சிகளை நடவு செய்து உள்ளேன். மழை கடந்த மூன்று வருடமாக பொய்த்து விட்டதால் எனக்கு சொட்டுநீர் பாசனம் நன்கு கை கொடுத்து உதவுகிறது.

மழை நன்றாக பெய்து இருந்தால் நான் இப்பொழுது சவுக்கு மரத்தை அறுவடை செய்து இருப்பேன். மழை இல்லாததால் இன்னும் ஒரு வருடம் கழித்து தான் அறுவடை செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது.

எனக்கு இன்னும் ஒரு வருடம் கழித்து சவுக்கு மரம் நல்ல லாபத்தை கொடுக்கும் என்று நம்புகிறேன்.

ஆகவே விவசாயிகள் மாற்று விவசாயமாகிய மரபயிர் விவசாயம் செய்தால் வேலை ஆட்கள் பிரச்னை இல்லை. பராமரிப்பு செலவும் குறைவு.

வறட்சி பகுதியில் மரசாகுபடி செய்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

**- ஆர்.வெங்கடேஷ்,**

**94882 46447**

## தமிழக நதிகளை இணைத்தால் ஆண்டுக்கு ரூ.5,000 கோடி வருமானம்!




இந்தியாவில் நீர் ஒதுக்கீடு மற்றும் பெறுதல் ஆகியவற்றில் உள்ள வேற்றுமைகளை, தனிநபர் நீர் கிடைப்பு கணக்கீடுகள் உள்ளடக்குவதில்லை என்பதால், நீர் ஆதாரங்களை அளவிட, புதிய அளவுகோல்களை பயன்படுத்த வேண்டும் என, 'யூனிசெப்' மற்றும், 'புட் அண்டு அக்ரிகல்ச்சர் ஆர்கனைசேஷன்' ஆகியவை குறிப்பிடுகின்றன. இந்த வித்தியாசமே நீர் பெறுவது, பயன்படுத்துவது தொடர்பை தீர்மானிக்கும் காரணியாக இருக்கிறது.

மோசமான நீர் பற்றாக்குறை பிரச்னைகள், விவசாயம், தொழில்துறைகளில் துவங்கி, வீடுகள் வரை பூசல்களை அதிகரிக்கிறது. நீர் வசதியில்லாத போது, சுகாதார வசதிகளை அமைப்பதிலும் பயன்படுத்துவதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில குழுக்களுக்கிடையில் பாதுகாப்பான குடிநீர், சுத்தம் ஆகியவற்றுக்கு வழி இல்லாதபோது, அது பொருளாதார, அரசியல், சமூக சமன்பாட்டு சீர் குலைவுகளையும், பாரபட்சங்களையும் உருவாக்குகிறது.எனவே, 2025 மற்றும் 2050ல் தேவைப்படும், தனிநபர் நீர் தேவைக்கான அளவை, உறுதி செய்யக்கூடியதாகவும், விவசாயத்திற்காகவும், நீர்பாசனத்திற்காகவும், தொழில்சாலைகளுக்கும், குடிதண்ணீருக்கும், தேசிய அதி-திறன் நீர்வழிச்சாலை

திட்டத்தையே, நாம் வலுவாக நம்புகிறோம்; பரிந்துரைக்கிறோம். இந்த திட்டமே, நதிகள், அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகள் போன்றவற்றை நிரப்பி நீர்ப்பாசன வசதிக்கு உத்தரவாதம் அளிப்பதுடன், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தியை உத்தரவாதப்படுத்தும் தொழில்துறைக்கான தேவையையும் பூர்த்தி செய்கிறது.தற்போது நாட்டில், 50 சதவீத வீடுகளில் மட்டுமே முறையான கழிப்பறை, சுகாதார வசதிகள் உள்ளன. எனவே, நாட்டின் ஒட்டுமொத்த நீர்வழித் தடத்தையும் உருவாக்கி, இணைக்க, மாநில அளவிலான நீர்வழித் தடங்களை அமைப்பதற்கான திட்டங்களை, அந்தந்த மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தி, பின் அவற்றை இணைக்க வேண்டும்.இத்தகைய நீர்வழிகளை கட்டி, இந்த திட்டத்தை நடைமுறைபடுத்த முடியுமா என கேள்விகள் எழலாம். இந்த உலகத்தில், நாங்கள் நேரில் கண்ட, ஆராய்ந்து பார்த்த, சில ஆற்றுப்படுகை மற்றும் நீர்வழிச்சாலை மற்றும் மேலாண்மைத் திட்டங்களை உங்கள் முன் உதாரணங்களாக வைக்க விரும்புகிறோம்.

### ஓஹியோ அதி- திறன் நீர்வழிச் சாலைகள்

கடந்த, 1775ல், அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டனின் உத்தரவுப்படி, அமெரிக்க ராணுவத்தின் பொறியாளர்கள் அணி உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் பிரதான செயல்பாடுகளாக, அதி- திறன் நதிவழி போக்குவரத்தை உருவாக்குவது, நீர் மின்சக்தியை உற்பத்தி செய்வது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.இத்திட்டத்தின் கீழ், 400க்கும் மேற்பட்ட பெரிய செயற்கை ஏரிகள், நீர்த் தேக்கங்கள் (படல அமைப்பு கிணறுகள்), 8,500 மைல் நீள நீர்வழிச்சாலைகள், கரைகள், நூற்றுக்கணக்கான சிறிய அளவிலான வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில், 1.12 லட்சம் கோடி கன அடி நீர் தேக்கப்படுகிறது. இவ்வாறே நாங்கள் கனடா, நெதர்லாந்து, அயர்லாந்து, பிரேசில் நீர்வழி அமைப்புகளையும் ஆராய்ந்தோம்.கனடாவிலும், அமெரிக்காவிலும் நீர்வழிச் சாலைகள் இந்த இருநாட்டிலும், உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்துக்கான சரக்குப் போக்குவரத்தில் கணிசமான அளவுக்கு நீர்வழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பார்க்க:**http://www.britannica.com/EBchecked/topic/91513/Canada/43308/Waterways**)

## நெதர்லாந்து நீர்வழிகள்

மொத்தம், 6,000 கி.மீ., நீளமுள்ள நீர்வழிகளோடு, ஐரோப்பாவிலேயே விரிவான, மிகவும் அடர்த்தியான, நீர்வழி போக்குவரத்து அமைப்பை உடையது நெதர்லாந்து. நதிகளும் கால்வாய்களுமான இந்த அமைப்பில் சில, போக்குவரத்து வழிகளாகவும், வடிகால் வசதிகளாகவும், பிணைக்கப்பட்டுள்ளன. நாட்டின் எல்லா பகுதிகளிலும், இவை காணப்படுகின்றன. அயர்லாந்து நீர்வழிகள் கடந்த, 20ம் நூற்றாண்டின் கடைசி, 15 ஆண்டுகளில், பழைய நீர்வழிகளை மீட்டெடுத்ததில் முதலிடம் அயர்லாந்துக்கு தான்.

## பிரேசில் நீர்வழிகள்

பிரேசில் நீர்வழிகளின் பயன்பாட்டுத்திறன் மிக அதிகம். என்றாலும், 60 ஆயிரம் கி.மீ., நீளமுள்ள பிரேசில் நீர்வழிகளில், 13 ஆயிரம் கி.மீ., அளவுக்கே, தற்போது பயன்படுத்தப்படுகின்றன. வேளாண், கனிம பொருட்கள் மட்டுமே நீர்வழிகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன.. அமேசானில், 6,280 கி.மீ., துார நீர்வழியானது, உலகின் மிக வேகமான நீர்வழியாகும். இது, பலநாடுகள் வழியாக செல்கிறது. பிரேசில், பெரு, ஈக்வடார், கொலம்பியாவிலிருந்து அமேசானின் நீர்முகங்கள் மூலமாக நீர் வருகிறது.

(Ref: **http://www.wwinn.org/brazil-inland-waterways**)

## ஜெர்மனியில் மக்தேபர்க் நீர்ப் பாலம்

ஜெர்மனியில் உள்ள மக்தேபர்க் நீர்ப்பாலம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இது 2003 அக்டோபரில் திறக்கப்பட்டது. 918 மீட்டர் உயரமுள்ள இது, உலகின் மிக நீளமான போக்குவரத்து சாத்தியமுள்ள, நீர் வழிச்சாலையாகும்.

## தாய்லாந்து

இங்கு, மலையை குடைந்து, ஒரே தட்டில் நேர்வழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு, எவ்வாறு மலையை குடைந்து சாலை உருவாக்கப்படுகிறதோ, அதைப் போலவே, இந்தியாவின் தேசிய அதி-திறன் நீர்வழிகள், மலைகளை எங்கெல்லாம் சந்திக்கிறதோ, அங்கெல்லாம், 750 அடி கடல் மட்டத்திற்கு மேல், சரிவின்றி குடையப்பட்டு, நீர்வழிச் சாலை அமைக்கப்படும். இந்தியாவில் தற்போது, 4,332 கி.மீ., உள்நாட்டு நீர்வழிகள் உள்ளன. இதை, தேசிய நீர்வழி என, அரசு பிரகடனப்படுத்தியிருக்கிறது. இதில், கங்கை, 2,592 கி.மீ., நீளம் கொண்டது.

இதன் மூலம், ஓராண்டுக்கு, 7 கோடி டன் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தியாவின் மிகப்பழைய சரக்கு போக்குவரத்து முறைகளில் ஒன்று நீர்வழிப் போக்குவரத்து. ஆனால், இது இங்கே பிரபலமாகவில்லை.

## இந்தியாவில் எப்படி?

**கோவா**

நீரேற்றுக் குழாய்கள் மூலமாகவும், புவி ஈர்ப்பு சக்தி மூலமாகவும் இயங்கக் கூடிய வசதிகளைக் கொண்டு, மந்தோவி படுகையில், சுவாரி நதியையும், கலாய் நதியையும் இணைத்திருப்பதாக கோவா முதல்வர் என்னிடம் தெரிவித்தார். தங்கள் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்க இதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததாக அவர் கூறினார்.இந்த வகையில் நதிகளை இணைக்க வேண்டும் என, ஒவ்வொரு மாநிலமும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## குஜராத்

இது, 71 சதவீதம் நீர்ப் பற்றாக்குறை கண்ட மாநிலம். மாநிலத்தில், 29 சதவீத பரப்புள்ள, தெற்கு மற்றும் மத்திய குஜராத், நீர் மிகை பகுதியாக உள்ளதால், நதிகளை இணைக்கும் முயற்சியை, குஜராத் அரசு மேற்கொண்டு, இப்போது முதல் இணைப்புப் பணி முடிந்திருக்கிறது.நர்மதா வெள்ளப் பெருக்கின் போது வழிகிற நீரை, நர்மதா பிரதான வாய்க்கால் ஒன்றின் மூலம் திசை திருப்பி, ஹேரன், ஓர்சாங், கரத், மகி, சைதக், மோகர், வத்ரக், சபர்மதி, காரி, ரூபன், பானாஸ் ஆகிய ஆறுகளோடு இணைப்பதே அந்த திட்டம். இதன் மூலம், 700 சிறிய மற்றும் பெரிய கிராம நீர்த்தேக்க அமைப்புகளும், குளங்களும் நிரம்பும். இந்த இணைப்பானது, சரஸ்வதி ஆற்றுக்கான, 'தாரோய்' திட்டத்தின் வலக்கரை பிரதான வாய்க்காலின், முதல் கிளை வாய்க்காலிலிருந்து பிரிகிறது. இதன் காரணமாக, இந்த மாநிலம், வேளாண்மையில், 9 சதவீத வளர்ச்சி கண்டு விட்டது.மற்ற மாநிலங்களும், இதுபோன்ற வளர்ச்சி காண வேண்டும்.

## தமிழக நதிகள் இணைப்பு

தமிழக நதிகளை இணைப்பது குறித்து, இப்போது பார்ப்போம்.மேட்டூர் அணை வெள்ளத்தால் நிரம்பும் ஒவ்வொரு முறையும் மீதமுள்ள நீர், கடலில் கலக்கிறது. ஒவ்வோராண்டும், மேட்டூரிலிருந்து கடலில் கலக்கும் நீரின் அளவு, சராசரியாக 60 டி.எம்.சி., எனவே, கடந்த எட்டாண்டுகளில், 400 டி.எம்.சி., நீர், தடுப்பணைகளோ

நீர்த்தேக்க வசதிகளோ இல்லாத காரணத்தால், கடலில் சென்று சேர்ந்தது.கடந்த, 2005 வெள்ளத்தின் போது, 3.23 லட்சம் கனஅடி நீரை, கொள்ளிடம் ஆறு வெளியேற்றியது. ஒரு கி.மீ., அகலமும் 160 கி.மீ., நீளமும் உள்ள கொள்ளிடம் ஆறு, ஒரு நீர்த்தேக்கத்தைப் போல செயல்பட்டது. அதிக வெள்ளத்தை ஏற்கும் திறன், ஒரு வெள்ளப் போக்கு நீர்வழிக்கு இருக்க வேண்டும் என்பதை, கொள்ளிடம் காட்டியது. அதாவது ஒரு ஆற்றினை வெள்ள ஏற்பு வாய்க்காலாக மாற்றும்போது, நாம் நிறைய நீரை தேக்கி வைக்க முடியும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

பேராசிரியர் ஏ.சி.காமராஜ் குழுவினரும், வி.பொன்ராஜும் உருவாக்கிய, 'தமிழ்நாடு அதி -திறன் நீர்வழி திட்டத்தை' தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடமும், முன்னால் முதல்வர் கருணாநிதியிடமும், அவரவர் ஆட்சிக் காலத்தில் சமர்ப்பித்தோம். அவர்கள் நீர்ப் பிரச்னை குறித்த கவலை கொண்டு, சில நடவடிக்கைகளை எடுத்தனர். ஆனால், திட்டத்தைத் துரிதப்படுத்த முனையவில்லை.தமிழக நீர்வழிகள் சாலைத் திட்டம் புதுமையானது. இது நீர் சேகரிப்பாகவும் வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பாகவும் இணைந்து செயல்படுகிறது. இருவழிகளில் நீர் செல்லவும் ஆற்றுப்படுகைகளுக்கிடையில் ஏற்கனவே உள்ள அமைப்புகளின் மீது, பாதிப்பின்றி இணைப்புகளை மேற்கொள்கிறது.பின்வரும் அணைகளை இது இணைக்கிறது: சாத்தனூர், மேட்டூர், பவானி சாகர், வைகை, மணிமுத்தாறு, பேச்சிப்பாறை, சோலையாறு, பாபநாசம், சேர்வலாறு. அத்துடன் பல ஏரிகளையும் பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், வீராணம், ராமநாதபுரம் ஏரிகளையும் இணைக்கிறது. மேற்கு நோக்கி பாயும் ஆறுகளும் தமிழக நீர்வழி கிரிடில் இணைக்கப்படுகிறது. ஒரே கிடைமட்டத்தில் வரும்படியாக இது கடல் மட்டத்துக்கு மேல் 250 மீட்டர் உயரத்தில் கட்டப்படும். இணைப்பின் எந்தப் பகுதியிலிருந்தும், நீரை ஏற்றவோ, இறக்கவோ முடிகிற வகையில் அணைகளையும், ஏரிகளையும் இது இணைக்கிறது. ஆறுகள் முழுவதுமே, தமிழக நீர்வழிப் பாதையுடன் இணைக்கப்படுகின்றன.இந்த திட்டத்தை, ஐந்து கட்டங்களாக நடைமுறைப்படுத்த முடியும் என, பூர்வாங்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*முதல் கட்டத்தில், மேட்டூரும், வைகையும், 350 கி.மீ., நீள நீர்வழியால் இணைக்கப்படலாம்.

*இரண்டாம் கட்டத்தில், மேட்டூரையும், பாலாறையும், 270 கி.மீ., துாரத்தில் இணைக்கலாம்.

* மூன்றாம் கட்டத்தில், 130 கி.மீ., நீள வழியில், வைகையையும், தாமிரபரணியையும் இணைக்கலாம்.

*நான்காம் கட்டத்தில், தாமிரபரணியையும், பெருஞ்சாணியையும் இணைக்கலாம்.
*ஐந்தாம் திட்டமாக, சம காலத்தில், ஆறுகளையும், ஏரி, -துணை ஆறுகளையும், ஆங்காங்கே இணைக்க வேண்டும். இந்த திட்டத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், இது, அந்தந்த படுகைகளில் பயன்படுத்தப்படும் நீரை இணைப்பதில்லை; மாறாக உபரி நீரைமட்டுமே இணைக்கிறது. அதுவும், இரு வழிகளில் இணைக்கிறது. இதில் எங்கும், நீரேற்றும் வசதி பயன்படுத்தப்படவில்லை.இதைப் பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்ற முடியும்.

## பலன்கள்:

இந்தத் திட்டத்தால் மாநிலத்துக்கு பின்வரும் பலன்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது: திறமையான வெள்ளக் கட்டுப்பாடு; கூடுதலாக; 75 லட்சம் ஹெக்டேருக்கு நீர்ப்பாசன வசதி; கூடுதலாக, 2,150 மெகாவாட் நீர்மின்சக்தி; நிலத்தடி நீர் மட்ட உயர்வால், ஆண்டுக்கு, 1,350 மெகாவாட் மின்சக்தி மிச்சமாதல்; சரக்குப் போக்குவரத்துக்காக, 900 கி.மீ., நீள நீர்வழித்தடம்; 30 அடி ஆழமும், 360 அடி அகலமும் உள்ள நீர்வழியில், ஆண்டு முழுக்க போக்குவரத்து நடக்கலாம்; சாலைகளோடு ஒப்பிடுகையில், நீர்வழிப் போக்குவரத்துக்கான எரிபொருளில், 90 சதவீதம் மிச்சமாகும்; அத்துடன் நீர்வழி கிரிடிலிருந்து, 5 கோடி பேருக்கு, நேரடி குடிநீர் இணைப்பைச் சாத்தியமாக்கலாம்; மீன்வளர்ப்பு, சுற்றுலா, நீர் விளையாட்டுகள் என, பல கூடுதல் வாய்ப்புகள் இருக்கின்றன.

## திட்டக்கணிப்பு

இந்தப் பத்தாண்டு கால திட்டத்திற்கான நிதியை ஒதுக்குவதும் சாத்தியமே. இதன் மதிப்பு, 50 ஆயிரம் கோடி ரூபாய். மின்சக்தி திட்டங்கள், நீர்வழி நீர்த்தேக்கங்கள், அணைகள் அனைத்தும் இதில் அடங்கும். ஆண்டுக்கு, 10 ஆயிரம் கோடிக்கும் குறைவான பணத்தை, தமிழக அரசு பட்ஜெட்டில் ஒதுக்கி, கூடுதலாக மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிதி ஆதரவு இருந்தால், 5 முதல் 7 ஆண்டுகளில் இதைக் கட்டி விடலாம்.தமிழக நீர்வழிப் பாதை இணைப்பு இயங்கத் துவங்கினால், ஓராண்டுக்கு

5,000 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும். இதில், மின் சக்தி ஆதாயம், 2,350 கோடி ரூபாய்; போக்குவரத்து ஆதாயம், 1,450 கோடி; குடிநீர், மீன்வளம், சுற்றுலா ஆதாயங்கள் மூலம், 1,200 கோடி ரூபாய் கிடைக்கும்.வனவளர்ப்பு, நீர்மின்சக்தி பயன்பாடு, எரிபொருள் குறைந்த போக்குவரத்து ஆகியவற்றால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் மேம்பாடு, மிகவும் முக்கியமானது இந்த திட்டத்தை, உலக வங்கி நிதியுதவியுடன், BOOT முறையில் (கட்டு, -இயக்கு,- உரிமை கொள், -பின்பு மாற்று) நடைமுறைப்படுத்த முடியும்.இந்த திட்டம், பல் துறை சார்ந்தது. எனவே, சிவில் பொறியாளர்கள், நீர் நிபுணர்கள், இயந்திரவியல் நிபுணர்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணுவியல் நிபுணர்கள், மண்ணியலாளர்கள், வரைபடவியலாளர்கள், தொலையறிதல் நுட்பர்கள், தொழில் மேலாண்மை நிபுணர்கள் என, பலருக்கும், சவால்களும், பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படும்.தேசிய அளவிலான நீர்வழிகள் உருவான பின், இது, அவற்றோடு இணைக்கப்பட்டால், அதன் வழி வரும் ஆதாயங்கள் மிக முக்கியமானவை.

**டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்**
**வெ.பொன்ராஜ்**
**(தொடரும்)**

## வறட்சி இருந்தும் விவசாயிகள் சாதனை; வேளாண் பல்கலை துணைவேந்தர் பெருமிதம்

**கோவை** : "தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்ட போதும், விவசாயிகள், 130 மெட்ரிக் டன் தானியங்களை உற்பத்தி செய்து சாதனை படைத்தனர்," என, வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர் பெருமிதம் தெரிவித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலை மூதறிவியல் மாணவர்களுக்கான இரண்டாவது வேளாண் பட்டதாரி மாணவர்கள் மாநாடு, 'எதிர்காலத்துக்கான நீடித்த நிலையான வேளாண்மை' என்ற தலைப்பில் நடந்தது.தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், "தமிழகத்தில் 12 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், வறட்சி மற்றும் பருவநிலை மாறியுள்ள

காலங்களிலும், தமிழ்நாடு விவசாயிகள் 130 மெட்ரிக் டன் தானியங்களை உற்பத்தி செய்து சாதனை படைத்தனர். இதற்கு, தமிழ்நாடு, வேளாண் பல்கலை உயரிய தொழில் நுட்பங்களை கடைபிடித்ததும், விரிவாக்கத் துறை அலுவலர்களின் உதவியுமே காரணம்," என்றார்.மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் உள்ள மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குனர் கிராந்தி பேசுகையில், "உலகில், அனைத்து வளங்களையும் இந்தியா கொண்டுள்ளது. ஆனால், அவற்றை முழுமையாக பயன்படுத்தவில்லை. வெளிநாட்டினர், இந்தியாவின் வளங்களை கண்டறிந்து, அவர்களது பெயரில் உரிமம் பெற்று பயன்பெற்று வருகின்றனர்," என்றார்.

நெதர்லாந்தில் ரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சேவையை பாராட்டி, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நிறுவனத்தில் பணியாற்றி வரும் சனிலா வெலிகோத் பேசுகையில், "இந்தியாவில் ரசாயன ஆயுதங்களின் மாதிரிகளை ஆய்வு செய்யும் இரண்டு ரசாயன ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தில், நான் படிக்கும் காலத்தில், பேராசிரியர்கள், என் முன்னேற்றத்துக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். மாணவர்கள், தங்கள் நேரத்தை வீணாக செலவிடாமல், பயனுள்ள செயல்களில் நாட்டம் செலுத்த வேண்டும்," என்றார்.'ஆச்சி குரூப்' நிர்வாக இயக்குனர் பத்மா சிங் ஐசக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.விழாவில், மாணவர்களின் ஆராய்ச்சி சுருக்க கட்டுரைகள் நிறைந்த புத்தகம் வெளியிடப்பட்டது. பல்கலைக் கழக மூதறிவியல் முதன்மையர் மோகன், சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார்.

## கேரளாவிலும் பலத்த மழை

**திருவனந்தபுரம்**: வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகத்தைப் போல, கேரளாவிலும் நேற்று மழை பெய்தது. சூறைக்காற்று வீசியதில் ஏராளமான மரங்கள், வேரோடு சாய்ந்தன. திருவனந்தபுரம், கொல்லம் உள்ளிட்ட முக்கிய நகரங்களில், மிக பலத்த மழை பெய்தது. 'இம்மாதம் 9 வரை மழை நீடிக்கும்; மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம்' என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## வலுப்பெறுகிறது காற்றழுத்த தாழ்வு பகுதி: 48 மணி நேரத்தில் அதிகனமழை




**சென்னை**: "வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, மண்டலமாக மாறுவதால், அடுத்த, 48 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அதிகனமழைக்கு வாய்ப்புள்ளது," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்தார்.

தென்மேற்கு வங்கக் கடலில், இரண்டு தினங்களுக்கு முன் உருவான, காற்றழுத்த தாழ்வு நிலை, தாழ்வு பகுதியாக உருமாறி, குமரிக்கடல் பகுதியில், நேற்று முன்தினம், நிலை கொண்டிருந்தது.

### தீவிரமாகிறது:

இதன்காரணமாக, தமிழகத்தின் பல பகுதிகளில், நேற்று முன்தினம் முதல் கனமழை கொட்டி வருகிறது. தற்போது, காற்றழுத்த தாழ்வு பகுதியானது, வலுப்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர், ரமணன் கூறியதாவது: குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், இது தாழ்வு மண்டலமாக மாறும். தொடர்ந்து, வடமேற்கு திசை நோக்கி நகரக் கூடும். கடந்த, 24 மணி நேரத்தில், தென் தமிழகத்தின் அனேக இடங்களிலும், வடதமிழகத்தில், ஒரு சில பகுதிகளிலும், மழை பெய்துள்ளது. டெல்டா மாவட்டங்களில், தஞ்சை, திருவாரூர், நாகையில் கனமழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நாகை மாவட்டம், மயிலாடுதுறையில், 7 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், வட தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தின் அனேக இடங்களிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

## கடல் கொந்தளிப்பு:

அடுத்த, 48 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அனேக இடங்களில், அதிகனமழை எதிர்பார்க்கலாம். கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், தமிழக, கேரள, லட்சத்தீவு மீனவர்கள், கடலுக்குள் செல்ல வேண்டாம். தற்போதுள்ள நிகழ்வு, வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறினாலும், புயலாக மாறுவதற்கான வாய்ப்பில்லை. இந்த தாழ்வு மண்டலம், கரையை கடந்து, அரபிக் கடல் பகுதியில் பயணித்தாலும், தமிழகத்திற்கு, இன்னும், மூன்று தினங்களுக்கு மழை உண்டு. அதன்பின், வழக்கமான வெப்பநிலை உயர்வு உண்டு. இவ்வாறு, அவர் கூறினார்.

## மடப்புரத்தில் பத்ரகாளிக்கு செலுத்தும் எலுமிச்சை மாலைகள் விலை உயர்வு: வரத்து குறைவே காரணம்



**திருப்புவனம்**: எலுமிச்சை பழங்களின் விலை உயர்வால், சிவகங்கை அருகே மடப்புரம் பத்ரகாளியம்மனுக்கு, காணிக்கையாக செலுத்தும் எலுமிச்சை பழ மாலை, விலை 'கிடுகிடு' வென உயர்ந்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரத்தில் உள்ள பத்ரகாளியம்மன் கோவில் சன்னதியில், வேண்டிய வரம் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இங்குள்ள உக்கிர தெய்வமான காளியின் கோபத்தை தணிக்க, பக்தர்கள் எலுமிச்சம் பழ மாலை சாத்துவது வழக்கம். இதனால், இங்குள்ள கடைகளில், பூக்களை விட, எலுமிச்சை மாலைகள் தான் அதிகம் விற்கப்படும். இங்கு, குறைந்தபட்சம் 11 பழங்கள் உள்ள சிறிய மாலை முதல் 1,001 பழங்கள் உள்ள பெரிய மாலை வரை விற்கப்படும். எலுமிச்சை பழங்களின் வரத்து அதிகம்

இருந்த போது, ஒரு மாலை 50 முதல் 200 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது வரத்து குறைந்து விட்டதால், அதிக பட்சம் 1,001 பழங்களை கொண்ட பெரிய எலுமிச்சை மாலை, 4 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. விலை உயர்ந்த போதும், நேர்த்திக்கடன் செலுத்த வேண்டி, கூடுதல் விலை கொடுத்து வாங்கி, பக்தர்கள் அம்மனுக்கு எலுமிச்சை மாலையாக செலுத்துகின்றனர்.

இது குறித்து, வியாபாரி காந்தி கூறுகையில், " மதுரை, மார்க்கெட்டிற்கு பெங்களூரு, ஆந்திரா, கேரளா மற்றும் தேனி மாவட்டம் வருசநாடு பகுதியில் இருந்து எலுமிச்சை பழங்கள் வரத்து இருந்தது. தற்போது, மழை இல்லாததால், வரத்து குறைந்துவிட்டது. வரத்து நன்றாக இருந்தபோது, ஒரு மூடை (40 கிலோ) எலுமிச்சை 1,800 முதல் 2 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. தற்போது, 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் ரூபாயாக விலைஉயர்ந்துள்ளது. லாரி வாடகை, ஏற்று இறக்கு கூலி, சம்பளத்தை கணக்கிட்டு, எலுமிச்சை மாலைக்கு விலை நிர்ணயிக்கிறோம்," என்றார். மதுரை பக்தர் திருப்பதி கூறுகையில், " ஒரு வாரத்தில் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் மடப்புரம் வந்து விடுவேன். அம்மனுக்கு எலுமிச்சை மாலை சாற்றுவேன். தற்போது, விலை உயர்ந்துவிட்டது. இருந்தாலும்,நேர்த்தி செலுத்தும் நோக்கில், கூடுதல் விலை கொடுத்து வாங்குகிறேன்," என்றார்.

## <u>உயரும் பெரியாறு நீர்மட்டம்</u>

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், தொடர்ந்து பெய்து வரும் மழையால், தமிழகப்பகுதிக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு, மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணையின் நீர்பிடிப்பில், கடந்த 4 தினங்களாக பெய்து வரும் கனமழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டமும் உயரத் துவங்கியது. நேற்றும் அணைக்கு நீர்வரத்து 385 கன அடியாக இருந்தது. நீர்மட்டம் அதிகரித்து, 110.40 அடியாக இருந்தது. நீர் இருப்பு 975 மில்லியன் கன அடி. நீர்பிடிப்பு பகுதியில், தொடர்ந்து மழை பெய்து வருவதால், தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு மேலும் அதிகரித்து, 250 அடியாக இருந்தது. தொடர்ந்து, நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது.

**மாட்டுக்கு செயற்கை கால் பொருத்தி திருப்பூர் கால்நடைத்துறை அசத்தல்**




**திருப்பூர்**: சாலை விபத்தில் பின்னங்காலை இழந்த பசு மாட்டுக்கு, செயற்கை கால் பொருத்தி, திருப்பூர் கால்நடைத்துறை அசத்தியுள்ளது.

திருப்பூர் தாராபுரம் ரோட்டை சேர்ந்தவர் நிர்மலா. இவரது பசு மாடு, கடந்த ஆண்டு நவ., மாதம் சாலை விபத்தில் சிக்கியது; அதில் மாட்டின் பின்பக்க வலது கால் முற்றிலும் நசுங்கியது. நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரியில், மாட்டுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.கால் முற்றிலும் நசுங்கி, சேதமாகி விட்டதால், அகற்றுவதை தவிர வேறு வழியில்லை என டாக்டர்கள் கூறினர். மூன்று கால்களுடன் நிற்க வழியின்றி பசு மாடு மிகவும் சிரமப்பட்டு வந்தது. தினமும் மருந்து, மாத்திரைகளை கொடுத்து, மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.நாக்பூரில் உள்ள மனிதர்களுக்கான செயற்கை கால் தயாரிக்கும் நிறுவனத்தின் உதவியை, திருப்பூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் நாடினர். அந்நிறுவன அதிகாரிகள், திருப்பூருக்கு வந்து பின்னங்காலை இழந்த, பசு மாட்டின் காலை, அளவீடு செய்தனர். நாக்பூரிலுள்ள தனியார் நிறுவனத்தில், மாட்டுக்காக செயற்கை கால் தயாரிக்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 18,000.

நேற்று முன்தினம் மாட்டுக்கு அறுவை சிகிச்சை செய்து செயற்கை கால் பொருத்தப்பட்டது. செயற்கை கால் பொருத்திய கால்நடை டாக்டர்கள் ராமச்சந்திரன் மற்றும் நாகராஜன் ஆகியோர் கூறியதாவது: இரண்டு வயதுள்ள பசு மாட்டுக்கு, செயற்கை கால் பொருத்தினோம்.

சில நாட்களுக்கு வலி இருக்கும். தொடர்ச்சியாக சிகிச்சை அளித்து வருகிறோம்.குறிப்பிட்ட நாட்களுக்கு பின் பழக்கப்பட்டு விடும். தமிழகத்தில் இதுவரை நாய்க்கு மட்டுமே செயற்கை கால் பொருத்தியுள்ளனர். முதன் முறையாக

மாட்டுக்கு செயற்கை கால் பொருத்தியுள்ளோம். சில நாட்களில் நன்றாக நடக்கும், என்றனர்.

## வால்பாறையில் சாரல் மழை

**வால்பாறை**: வால்பாறையில், சாரல் மழையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கோவை மாவட்டம், வால்பாறையில், கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று, தொடர்ந்து சாரல் மழை பெய்தது. இதனால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஓமலூரில் பலத்த மழை

**ஓமலூர்**: ஓமலூரில், நேற்று மாலை, 3 மணிக்கு லேசான தூறல் மழை பெய்தது. தொடர்ந்து, இரவு, 7 மணிக்கு ஓமலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து, ஒரு மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இரவு முழுவதும் விட்டு விட்டு மழை பெய்ததால், குளிர் காற்று வீசியது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய சில நாட்களில், ஓமலூரில் கனமழை பெய்துள்ளதால், கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தேர்தல் முடிவு வெளியான பின் வெங்காயம் விலை உயரும்

**சேலம்**: லோக்சபா தேர்தல் முடிவு வெளியான பின், வெங்காய விலை உச்சத்துக்கு செல்லும் என, வியாபாரிகள் கூறினர். தமிழகத்தில், நான்கு மாதங்களுக்கு முன், ஒரு கிலோ பெரிய வெங்காயம், 100 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம், 70 ரூபாய்க்கும் விற்பனையானது. இந்த விலை தொடர்ந்து, இரண்டு மாதங்களுக்கு நீடித்தது. பின்னர், வெங்காய விளைச்சல் அதிகரிக்கவே, விலையில் சரிவு ஏற்பட்டது. படிப்படியாக விலை குறைந்து, தற்போது, ஒரு கிலோ சில்லரை விலையில், 20 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

சேலம், லீபஜார் வெங்காய வியாபாரிகள் கூறியதாவது:

லீபஜார் பகுதியில், 25க்கும் மேற்பட்ட வெங்காய மண்டிகள் உள்ளது. கடந்த ஒரு மாதமாக வெங்காய விலையில் மாற்றம் காணப்படவில்லை. தொடர்ந்து, விலை ஏறாமல், கட்டுக்குள் இருக்கிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து அதிகளவு பெரிய வெங்காயம் வரத்தாகிறது. ஓமலூர், வாழப்பாடி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம், கிணத்துக்கடவு, காங்கேயம், அரச்சலூர் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து, சின்ன வெங்காயம் வரத்தாகிறது. மொத்த விலையில், தரத்துக்கு ஏற்றப்படி, சின்ன வெங்காயம் ஒரு கிலோ, 13 முதல், 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பெரிய வெங்காயம் ஒரு கிலோ, 12 முதல், 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் இருந்து அதிகளவு பெரிய வெங்காயம் வரத்து இருப்பதால், விலை குறைவு என்று சொல்லலாம். மேலும், தேர்தல் ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின், தமிழகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள வெங்காயம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விடும். அதனால், வெங்காய விலையில் உயர்வு இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காஞ்சி மாவட்டத்தில் பரவலாக மழை

**காஞ்சிபுரம்** : வங்க கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

வங்க கடலில் உருவாகியுள்ள, குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.காஞ்சிபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை, நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை பல்வேறு பகுதிகளில் லேசான துாரல் மற்றும் மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக கேளம்பாக்கம் பகுதியில் 7.80 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மேலும், அக்னி நட்சத்திரத்தின் இரண்டாம் நாளான நேற்று, காலை 6:00 மணி முதல் காஞ்சிபுரம், உத்திர மேரூர், ஸ்ரீபெரும்புதுார், செய்யூர் ஆகிய பகுதியில் லேசான துாரல் ஏற்பட்டது. மேலும், குளிர்ந்த காற்று வீசியதால், வெப்பத்தின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. எனினும், மழை பெய்யாததால், மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் பெய்த மழை அளவு:

பகுதி மழை அளவு

செங்கல்பட்டு 1.00 மி.மீ.,

தாம்பரம் 3.00 மி.மீ.,

மதுராந்தகம் 5.00 மி.மீ.,

திருக்கழுக்குன்றம் 3.60 மி.மீ.,

மாமல்லபுரம் 5.80 மி.மீ.,

கேளம்பாக்கம் 7.80 மி.மீ.,

## மக்காச்சோளம் சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

**விழுப்புரம்**: விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில் மக்காச்சோளம் சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அதிகளவு கோழிப் பண்ணைகள் உள்ளன. இவற்றிற்கு பிரதான உணவு பொருளாக, மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயப்பாளையம் மற்றும் சங்கராபுரம் பகுதிகளில், துவக்கத்தில் விவசாயிகள் மக்காச்சோளம் பயிர் செய்தனர். தற்போது மக்காச்சோளம் குருணைகள், சர்க்கரை நோயாளிகள் மற்றும் உணவுக் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் அதிகம் சாப்பிடு கின்றனர். மக்காச்சோளத்தின் பிஞ்சுகள், சமையலில் கூட்டு வகைகள் செய்வதிலும் பயன் படுத்து கின்றனர். இதனால் மக்காச்சோளத்திற்கு கூடுதல் விலையும், பொது மக்களிடம் நல்ல வரவேற்பும் உள்ளது. இதனால் விழுப்புரம் அருகே உள்ள பிடாகம், அத்தியூர் திருக்கை, வேலியம்பாக்கம் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளனர்.

## விழுப்புரத்தில் திடீர் சாரல் மழை

**விழுப்புரம்**; விழுப்புரத்தில் திடீரென பெய்த சாரல் மழையால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மகிழ்ச்சியடைந்தனர். தமிழகத்தில் அந்தந்த மாவட்டங்களில் கடந்த இரு தினங்களாக சில இடங்களில் பரவலான மழையும், பல இடங்களில் இடியுடன், கூடிய பலத்த மழையும் பெய்து வருகிறது. விழுப்புரம்

மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, செஞ்சி பகுதிகளில் பெய்த மழை விழுப்புரம் பகுதி மக்களை மட்டும் ஏமாற்றியது. இந்லையில் நேற்று மாலை 4:30 மணிக்கு திடீரென பெய்த சாரல் மழை 4:55 மணி வரை பெய்தது. பலமாக பெய்யாவிட்டாலும் கோடைக்கு இந்த மழை போதுமென கருதிய மக்கள் அந்த மழையை ரசித்தவாறு நனைந்த படி சென்றனர். கோடை மழை விழுப்புரத்தை ஏமாற்றினாலும், அவ்வப்போது சிறிது நேரம் பெய்யும் மழையால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நாவல் பழ சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வேளாண் துறை பரிந்துரை

**மரக்காணம்**: மருத்துவ குணங்கள் நிறைந்த நாவல் பழ மரங்களை சாகுபடி செய் தால் விவசாயிகள் அதிக வருவாய் பெற்று பயனடையலாம் என வேளாண் துறை பரிந்துரை செய்துள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் இந்தோனிஷியா ஆகிய நாடுகளை தாயகமாக கொண்ட நாவல் பழ மரங்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் அதிக லாபம் தரும் பழமாக வணிக ரீதியில் சாகுபடிசெய்யப்படுகிறது.

நம் நாட்டில் அழகிற்காகவும் நிழலுக்காகவும் சாலையோரத்தில் வளர்க்கப்படும் இம் மரங்கள் 100 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியவை. நாவல் மரங்கள் பெரும்பாலும் விதைகள் மூலம் உற்பத்தி செய் யப்படுகின்றன. நல்ல சதையுடன் கூடிய பெரிய வகை பழங்களை தேர்வு செய்து அவற்றின் விதைகளை பாலிதீன் பைகளில் முளைக்கவைக்கப்பட்டு நடவுக்கு பயன்படுத்தபடுகிறது.

தற்போது ஆந்திரா, மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் ஒட்டுக் கட்டப்பட்டு வீரிய ரக கன்றுகள் சாகுபடிக்கு பயன்படுத்தப்படுகிறது. இவைகள் 4 அல்லது 5 ஆண்டுகளில் பூப்பதன் மூலம் விரைவில் மகசூல் கிடைக்கிறது. இப்பழ மரங்கள் எல்லா வகை மண்ணிலும் நன்கு வளரும் தன்மை கொண்டது. களர், உவர் மற்றும் உப்பு தன்மையால் பாதிக்கப்பட்ட நிலங்களிலும் நன்கு வளரக்கூடியது. நாவல் பழத்தில் 70 சதவீதம் சதைப்பகுதி உண்ணப்பயன்படுகிறது. துவர்ப்பு மற்றும் புளிச்சுவையுடன் கூடிய இனிப்பு சுவை கொண்ட இப்பழங்கள் ரத்தத்தில் சர்க்கரை அளவை குறைக்கிறது . வைட்டமின் ஏ மற்றும் சி அதிகளவில் உள்ளதால் ஜாம், ஜல்லி, வினிகர் மற்றும் ஒயின் தயாரிக்க பயன்படுகிறது .

திண்டிவனம் வேளாண்துறை உதவி இயக்குணர் கென்னடிஜெயக்குமார் கூறியதாவது:

மே மற்றும் ஜூன் மாதங்களில் இப்பழங்களை அறுவடை செய்ய லாம். நான்கு ஆண்டுகள் கடந்த மரம் ஆரம்பத்தில் 50 கிலோ பழங் களை மகசூலாக கிடைக்கும் . 10 ஆண்டுகளுக்கு பிறகு 80 முதல் 100 கிலோ பழங்களை மகசூலாக அளிக் கும் .தற்போது சென்னை போன்ற பெரு நகரங்களில் நாவல் பழங்கள் கிலோ 120 முதல் 150 ரூபாய்க்கு விற்கின்றன. இப்பழ மரங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்றார்.

## கோடை மழையால் எள் செடிகள் பசுமை

**வானூர்**: வானூர் பகுதியில் தண்ணீரின்றி வதங்கிய மானவாரி எள் செடிகள் திடீர் மழையால் பசுமையாக மாறியுள்ளது. வானூர் ஒன்றியம் கிளியனூர், உலகாபுரம், பேராவூர், நல்லாவூர், டி. பரங்கனி, தேற்குணம் ஆகிய கிராம பகுதியில் கோடை கால மானாவாரி எள் சாகுபடி செய்துள்ளனர். இந்தாண்டு கடும் வறட்சியால் மணல் பாங்கான விவசாய நிலங்களில் மானாவாரியாக எள் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் காய் பிடிக்கும் தருவாயில் தண்ணீர் இன்றி வதங்கி வந்தன. கடந்த சில நாட்களில் எள் பயிர்கள் காய்ந்து விடும் நிலை இருந்தது. வானூர் பகுதியில் அக்னி நட்சத்திரம் துவங்கிய நாளில் கோடை மழை பெய்தது. இதனால் தண்ணீரின்றி வாடிய எள் பயிர்கள் பசுமையாக மாறியுள்ளதால், எள் சாகுபடி அமோக விளைச்சல் தரும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வட மாநிலங்களில் வறட்சி உளுந்து விலை உயர்வு

**சேலம்**: வட மாநிலங்களில் மழை இல்லாததால், கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால், தமிழகத்தில், உளுந்து விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தை போலவே, வட மாநிலங்களிலும் பருவமழை பெய்யாததால், வறட்சி ஏற்பட்டு, தமிழகத்திற்கு வரத்தாகும் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது.

ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு உளுந்து வரத்தாகிறது. ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால், உளுந்து விளைச்சல் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. அதனால்,

தமிழகத்தில், உளுந்து அதிக விலைக்கு விற்கப்படுகிறது. கடந்த மாதம், ஒரு கிலோ உளுந்து, 73 முதல், 80 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது, ஒரு கிலோ உளுந்து மொத்த விலையில், 82 ரூபாய்க்கும், சில்லறை கடைகளில், 90 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதனால், ஹோட்டல்களில் இட்லி, தோசை, வடை போன்வற்றின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து உளுந்து வியாபாரி ஒருவர் கூறியதாவது: வட மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டதால் தான், இந்த அளவுக்கு விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு, இன்னும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## உச்சத்துக்கு சென்ற மஞ்சள் விலையால் மகிழ்ச்சி ஒரே வாரத்தில் ரூ.4,500 வரை உயர்ந்தது

**ஈரோடு**: கடந்த, ஒரு வாரத்தில், கூட்டுறவு சங்கத்திலும், தனியார் மஞ்சள் மண்டி ஏலத்திலும், ஒரு குவிண்டால் மஞ்சள், 4,500 ரூபாய் அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கீழ்பவானி பாசன திட்டம், மேட்டூர் வலது இடதுகரை, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, பவானி மற்றும் காலிங்கராயன் பாசன திட்டத்தில், பரவலாக மாவட்டம் முழுவதும், மஞ்சள் பயிரிடப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களிடம் உள்ள மஞ்சளை, ஒழுங்குமுறை விற்பனை கூடம், தனியார் மஞ்சள் மண்டியிலும், விற்பனை செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக, மஞ்சளுக்கு கட்டுபடியாகும் விலை இல்லாததால், கூடுதல் விலைக்காக விவசாயிகள் காத்திருந்தனர். இந்நிலையில், கடந்த வாரம் தனியார் ஏலத்தில் குவிண்டால் ஒன்றுக்கு, 4,000 ரூபாயாக இருந்த மஞ்சள், மே மாதம் துவக்கம் முதலே, 6,000 முதல், 7,000 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது மஞ்சளுக்கு விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைப்பதால், கூட்டுறவு சங்கத்திலும், ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும், தனியார் மஞ்சள் மண்டியிலும், மஞ்சள் வரத்து அதிகரிக்க துவங்கி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், மஞ்சள் ஏலம் விவரம்: ஏப்ரல், 29ம் தேதி, ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், மஞ்சள் விரலி, 6,481 முதல், 7,506 ரூபாய்க்கும், கிழங்கு, 6,304-7,229 ரூபாய்க்கும் ஏலம் போனது. மே, 2ம் தேதி, ஈரோடு மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கிழங்கு, 6,304-7,438, விரலி, 6,227-7,104, வெளிமார்க்கெட் கிழங்கு, 5,997-7,385, விரலி, 4,876-7,074, சேலம் மார்க்கெட் கிழங்கு, 6,009-8,139, விரலி, 5,909-7,564,

ஈரோடு சொசைட்டி கிழங்கு, 6,399-7,511, விரலி, 6,888-7,279, கோபி சொசைட்டி கிழங்கு, 6,322-7,367, விரலி, 6,287-7,027 ரூபாய் வரை விற்கப்பட்டது.

கடந்த, ஒரு வாரத்தில் தனியார் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடம், கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்தில், இதுவரை அதிகபட்ச விலையாக, 7,500ம், சேலம் மார்க்கெட்டில் அதிகபட்சமாக கடந்த, 29ம் தேதி கிழங்கு, 8,888 ரூபாய்க்கும் விற்பனையானது. ஒருவாரத்தில் மஞ்சள் விலை, 4,500 ரூபாய் உயர்ந்ததால், மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருச்சியில் கோடை மழை சராசரியாக 4.75 மி.மீ., பதிவு

**திருச்சி**: திருச்சி மாவட்டத்தில், சாராசரியாக, 4.75 மி.மீ., கோடை மழை பெய்தது. திருச்சி மாவட்டத்தில் நேற்று பெய்த மழை அளவு (மி.மீ.,) விவரம் வருமாறு:

லால்குடியில், 21, புள்ளம்பாடி, 24.60, தா.பேட்டையில், 10, துறையூர், 1, திருச்சி விமானநிலையம், 2.70, திருச்சி டவுன், 6.20, நவலூர்கொட்டப்பட்டு, 1.20, நந்தியார் தலைப்பு, 4, சமயபுரம், 20, தேவிமங்களம், 16, பொன்மலை, 6.80, திருச்சி ஜங்ஷன், 5.20 மி.மீ., என, மொத்தம், 118.70 மி.மீ., மழை அளவு பதிவானது. சராசரியாக, 4.75 மி.மீ., மழை அளவு பதிவானது. மணப்பாறை, முசிறி, மருங்காபுரி, பொன்னணியாறு அணைக்கட்டு, கல்லக்குடி, வாத்தலை அணைக்கட்டு, சிறுகுடி, புலிவலம், குப்பம்பட்டி, கோவில்பட்டி, தென்பரநாடு, மேல்அணை, துவாக்குடி ஐ.எம்.டி.ஐ., ஆகிய பகுதிகளில் மழை பெய்யவில்லை.

## கடலோரக் கிராமங்களில் பலத்த மழை

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதிகளில் நேற்று(6ம் தேதி) பரவலாக மழை பெய்தது. கடலோரக் கிராமங்களில் பலத்த மழை பெய்ததால் நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்வதை தவிர்த்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் முதலே கோடை வெயிலின் தாக்கம் குறைந்து இதமான சூழ்நிலை நிலவியது. குளிர்ந்த காற்றுடன் அவ்வபோது லேசான சாரல் மழை பொழிந்ததால் மக்கள் நிம்மதியடைந்தனர்.

நேற்று(6ம் தேதி) காலை முதலே அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி உள்ளிட்ட டெல்டா பகுதிகளில் சாரல் மழையுடன் அவ்வப்போது பலத்த மழை

பெய்தது. கோட்டைப்பட்டிணம், ஜெகதாப்பட்டிணம், கட்டுமாவடி, மீமிசல் உள்ளிட்ட கடலோரக் கிராமங்களில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. வழக்கத்துக்கு மாறாக நேற்று அதிகாலை முதலே கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது. இதன்காரணமாக மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்வதை நாட்டுப்படகு மீனவர்கள் பலர் தவிர்த்தனர். டெல்டா பகுதிகள் மட்டுமின்றி புதுக்கோட்டை உட்பட மாவட்டத்தின் இதரப் பகுதிகளிலும் நேற்று காலை முதலே சாரல் மழை பெய்தது. நீண்ட நாட்களாக நிலவிவந்த வெயிலின் தாக்கத்தை தணிக்கும் விதமாக பெய்த சாரல் மழை அம்மாவட்ட மக்களை மகிழ்வித்துள்ளது.

## உரத்தின் தேவை அதிகரிப்பு

**தேனி**: தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, போடி ஒன்றியங்களில் உரத்தின் தேவை அதிகரித்துள்ளது. கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், கடமலைக்குண்டு ஒன்றியங்களில் நெல் அறுவடை முடிந்து, மானாவாரி விதைப்பு நடந்து ஒரு மாதம் ஆகிறது.

தற்போதைய மழையால் ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, போடி ஒன்றியங்களில் பயிர்களில் வளர்ச்சி பருவம் காணப்படுகிறது. இதனால் உரங்களின் தேவை அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்ப இப்பகுதிகளில் உரங்களை ஸ்டாக் வைத்துள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ராமநாதபுரத்தில் 50 மி.மீ., மழை

**ராமநாதபுரம்** : ராமநாதபுரத்தில் பெய்து வரும் கோடை மழையால் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் மே 4ல், துவங்கியது. ஏப்.30 இரவு முதல், ராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

இதை தொடர்ந்து ஒரு வாரமாக மிதமான மழை பெய்து வருகிறது.

கடலோர பகுதிகளில் ஒரு சில இடங்களில் போதிய மழை பெய்யவில்லை. நேற்று, காலை முதல் மாலை வரை பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி, ராமநாதபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது. பரமக்குடியில் நகரின்

முக்கிய வீதிகளில் மழை நீர் ஓடியதால், பல மணி நேரம் போக்குவரத்து பாதித்தது. சில நாட்களாக பெய்தும் வரும் மழையால், மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது.

தாழ்வான இடங்கள், விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. நேற்று, காலை 8 மணி நிலவரப்படி ராமநாதபுரத்தில் அதிகபட்சமாக 50.6 மி.மீ., மழை பெய்துள்ளது.

இதர பகுதிகளில் பெய்த மழை அளவு( மி.மீட்டரில்) வட்டானம் 37, தொண்டி 36.6, கடலாடி 19.8, திருவாடானை18.8, தீர்தாண்டதானம் 17, ஆர்.எஸ்.மங்கலம் 13, பாம்பன் 11.5, வாலாநோக்கம் 11, பரமக்குடி 4, தங்கச்சிமடம் 4, ராமேஸ்வரம் 2, பள்ளமோர்குளம் 2, கமுதி 1 மி.மீட்டர் மழை பெய்தது.

## மாவட்டத்தில் கொட்டி தீர்த்த மழை; காரைக்குடியில் 43 மி.மீ., பதிவு

**சிவகங்கை** : சிவகங்கை மாவட்டத்தில், பெரும்பாலான நகரங்களில் பரவலாக நேற்று நல்ல மழை பெய்தது. காரைக்குடியில் அதிகபட்சம் 43 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில், அக்னி நட்சத்திரம் துவங்கிய நாளில் இருந்தே தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால், பூமி குளிர்ச்சி அடைந்து காணப்படுகிறது. இதனால், மக்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பித்துள்ளனர்.

இருப்பினும், நிலத்தடி நீர்மட்டம் உயரும் அளவிற்கு, மழை பெய்யவில்லை. தொடர்ந்து மழை பெய்து, ஆறுகள், கண்மாய்களில் நீர் நிரம்பினால் மட்டுமே, குடிநீர் தட்டுப்பாடு இன்றி மக்கள் வாழ்வாதாரம் நடத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், தற்போதுபெய்து வரும் மழை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மழை அளவு: அந்த வகையில், மாவட்டத்தில் அனைத்து தாலுகாக்களிலும் நல்ல மழை பெய்துள்ளது.

அதிகபட்ச மழையாக காரைக்குடி - 43 மி.மீ., மானாமதுரை - 37; சிவகங்கை - 31, திருப்புவனம் - 30.6, தேவகோட்டை - 10.4, இளையான்குடி - 7, திருப்புத்தூர் - 2 வரை பதிவானது.

## சித்திரையில் முதல் மழையை பார்த்து விவசாயம் துவக்கம்

**சிங்கம்புணரி** : சித்திரையில், கோடை மழை பெய்துள்ளதால், உழவு பணிகளை சிங்கம்புணரி பகுதி விவசாயிகள் ஆர்வத்துடன் துவக்கி வருகின்றனர். சிங்கம்புணரி பகுதிக்கு உட்பட்ட கிராமங்களில், சித்திரை முதல் நாளில், கிராம பொது இடத்தில் விவசாயிகள் கூடுவர்.

அங்கு, சாமி கும்பிட்டு விட்டு, உழவு பணிகளை துவக்குவது வழக்கம். அந்த வகையில், சித்திரையில் முதல் மழை பெய்த பின்னரே உழவு பணிகளை துவக்குவர். சித்திரையில், நல்ல மழை பெய்துவருவதால், இந்த ஆண்டு விவசாயம் செழிக்கும் என, விவசாயிகள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இதையடுத்து, கிராமப்புற விவசாயிகள், நஞ்சை,புஞ்சை நிலங்களில் சனி மூலையில் உழவு பணியை துவக்கி, விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## விருதுநகரில் தொடரும் கோடை மழை; கோவிலாங்குளத்தில் 49.60 மி.மீ.,பதிவு

**விருதுநகர்** : விருதுநகர்மாவட்டத்தில் கடந்த இருநாட்களாக, தொடர் மழை பெய்துவருகிறது. நேற்று காலை 8.30 மணிப்படி, அதிகபட்சமாக கோவிலாங்குளத்தில் 49.60 மி.மீ.,பதிவானது.

மாவட்டத்தில், கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக, கோடை வெயில் வாட்டி எடுத்தது. பொதுமக்கள் அவதிப்பட்டனர். இதனிடையே, கடந்த வாரம் கோடை மழை பெய்ததால், சற்று நிம்மதி அடைந்தனர்.

இந்நிலையில், வங்கக்கடலில் உருவான, குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, மாவட்டத்தில், நேற்றுமுன்தினம், ஓரளவு மழை பெய்தது. நேற்று காலை 8.30 மணிப்படி, அதிகபட்சமாக, கோவிலாங்குளத்தில், 49.60 மி.மீ., மழை பதிவானது. திருச்சுழி 25.40, அருப்புக்கோட்டை 20.40, சாத்தூர் 18, வெம்பகோட்டை 14.20, விருதுநகர் 11, காரியாபட்டி 9.40, சிவகாசி 2.40 மி.மீ., மழை பதிவானது. விருதுநகரில், நேற்று காலை முதலே, வெயில் இன்றி, வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

அவ்வப்போது சாரல் மழை பெய்தது. மே 4ல், அக்னி நட்சத்திரம் துவங்கிய நிலையில், இந்த மழையால், கோடை வெயிலின் வெப்பம் குறைந்து, பூமி குளிர்ந்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். நீர்நிலைகளுக்கும் ஓரளவு தண்ணீர் வர துவங்கி உள்ளன.

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த இரு ஆண்டுகளாக, சரி வர மழை பெய்யாமல், கண்மாய்கள் வறண்டு, நிலத்தடி நீர் கேள்விக்குறியானது. குடிநீருக்காக தண்ணீரை விலைக்கு வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நிலையில், தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தும், ஸ்ரீவில்லிபுத்தூரில் மழை பெய்யாமல், மக்களை கவலையில் இருந்த நிலையில், கடந்த இரு நாட்களாக மழை பெய்து வருகிறது.

நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இதையடுத்து, மதியம், மாலை வேளைகளில், பரவலாக மழை பெய்தது. இதனால், வெயிலின் தாக்கம் இன்றி, மக்கள் நிம்மதியடைந்தனர்.


ராஜபாளையம்: ராஜபாளையத்தில் கடந்த சில மாதங்களாக, தொடர்மழை இல்லை. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், குடிநீரை விலைக்கு வாங்கும் மக்கள், உப்புதண்ணீரையும் விலைக்கு வாங்கினர். இந்நிலையில்,இருநாட்களுக்கு முன், ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது.

ரோட்டில் மழைநீர் தேங்கியது. நேற்று காலை 10 மணி முதல், ஒரு மணிநேரத்திற்கு ஒருமுறை மழை பெய்து கொண்டே இருந்தது. குளிர்ச்சியான சூழல் இருந்தது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**முல்லை பெரியாறு அணைப் பாதுகாப்பு சட்டம் செல்லாது:உச்சநீதிமன்றம்**



முல்லை பெரியாறு அணைப் பாதுகாப்பு சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. முல்லைப் பெரியாரில் 142 அடிக்கு தண்ணீர் தேக்கலாம் எனவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கேரள அரசின் அணைப்பாதுகாப்பு சட்டத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்தது. முல்லைப்பெரியாறு அணை பலமாக உள்ளது என கேரள அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கியுள்ளது.

**விதை தெளிப்பு பணி தீவிரம் ஆழ்துளை கிணறு விவசாயிகள் குறுவை சாகுபடியில் மும்முரம்**

**காட்டுமன்னார்கோவில்,** : கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு நெற்பயிர் முக்கியமாக பயிரிடப்படுகிறது. மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது. வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் பாசனம் பெற்று விவசாய பணிகள் இந்த பகுதியில் நடைபெறுகிறது. கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பகுதியில் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக்குறையால்

குறுவை சாகுபடி குறைந்து வருகிறது. ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் மட்டுமே குறுவை சாகுபடி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, உரவிலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக குறுவை சாகுபடியை விரும்புவதில்லை. மேலும் தற்போது ஏற்பட்டுள்ள மின்தடை காரணமாகவும், குறுவை சாகுபடி செய்யப்படுவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு மிகுந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சில விவசாயிகள் மட்டும் ஜூன், ஜூலை மாதங்களில் மேட்டூர் அணை திறக்கப்படுவதை கருத்தில் கொண்டு குறுவை சாகுபடியில் ஈடுபடுகின்றனர். தற்போது குருங்குடி பகுதியில் குறுவை சாகுபடிக்கு விதை தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். விதை விடும் பணி மேலும் பல்வேறு கிராமங்களில் ஒரு சில விவசாயிகள் செய்து வருகின்றனர்.

## <u>வரத்து குறைவால் தக்காளி விலை அதிகரிப்பு</u>

**அரூர்**,: தர்மபுரி பகுதியில் தக்காளி வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது. விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடை ந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம் அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, பொம்மிடி, மொரப்பூர், கம்பைநல்லூர், இருமத்தூர், ஒடசல்பட்டி கூட்ரோடு உள்ளிட்ட இடங்களில் 20க்கும் மேற்பட்ட தக்காளி மண்டிகள் செயல்படுகிறது. இந்த மண்டிகளில் இப்பகுதி விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் தக்காளிகள் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டு பின்னர் அதை சென்னை, பெங்களூர், கோவை, பாண்டிச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு வியாபாரிகள் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.

சென்ற மாதத்தில் தர்மபுரி பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகரித்தது. இதனால், சரியான விலை கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வந்தனர். மேலும் கூலிக்கு கூட கட்டுபடியாகாத விலையில் தக்காளி விற்பனை செய்யப்பட்டதால், அதை செடியிலிருந்து பறிக்காமல் விட்டனர். மேலும் தக்காளியை கூடை கூடையாக சாலையோரங்களில் குரங்குகளுக்கு கொட்டிவிட்டு சென்றனர்.

இந்நிலையில், மழையின்றி தக்காளி வரத்து குறைந்ததால், இந்த வாரம் 25 கிலோ கொண்ட கூடை தக்காளியின் விலை ரூ.200-225 வரை விற்பனை

செய்யப்படுகிறது. சில்லரை விலையில் கிலோ ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது.

வரும் நாட்களில் தக்காளி விலை உயர வாய்ப்புள்ளதாக கம்பைநல்லூர் மண்டி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக மலை காய்கறிகள்

**மஞ்சூர்**, : தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக மலை காய்கறிகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் பல ஆயிரம் ஹெக்டர் பரப்பில் தேயிலை பயிரிட்டுள்ளார்கள்.

எமரால்டு, இத்தலார், நஞ்சநாடு, அட்டுபாயில், கல்லக்கொரை, முத்தொரை, பாலாடா உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் மலை காய்கறி விவசாயம் அதிகளவில் உள்ளது. இந்நிலையில் கடந்த 12ஆண்டுகளுக்கு முன் தேயிலை விவசாயத்தில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதையடுத்து வருவாய் இழப்பால் அவதிக்குள்ளான விவசாயிகள் பலரும் தேயிலை விவசாயத்துடன் மலர் சாகுபடி, மலை காய்கறிகள் விவசாயத்திற்கு மாறினார்கள். இந்நிலையில் சிறிய அளவில் தோட்டங்களை வைத்துள்ள விவசாயிகள் தங்களது தோட்டங்களில் தேயிலை விவசாயத்துடன் ஊடு பயிராக மலைகாய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். தேயிலை செடிகளின் இடைவெளிகள், காலியிடங்களில் உருளை கிழங்கு, பீன்ஸ், கேரட், அவரை, பட்டாணி உள்ளிட்ட பலவகையிலான காய்கறிகளை பயிரிட்டு வருவாய் ஈட்டுவதில் ஆர்வாங்காட்டி வருகிறார்கள். இது குறித்து கீழ்குந்தா பகுதியை சேர்ந்த விவசாயி மகாமகாபெள்ளியப்பன் என்பவர் கூறுகையில், ‘‘விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களில் உள்ள காலியிடங்கள் மற்றும் செடிகளின் இடைவெளிகளில் உருளைகிழங்கு, பீன்ஸ் போன்ற மலைகாய்கறிகள் மற்றும் பல வகையான கீரைகளை பயிரிடுவதன் மூலம் கூடுதல் வருவாய் பெறலாம். இது மட்டுமின்றி தங்களது வீட்டு தேவைகளுக்கும் பயன் படுத்துவதன் மூலம் அன்றாட செலவினங்களையும் கட்டுப்படுத்தலாம்,’’ என்றார்.

**திருச்சி அருகே 100 ஏக்கரில் கரும்பு சாகுபடி துவக்கம் பார் பிரிக்கும் பணி தீவிரம்**

**திருவெறும்பூர்**, : திருச்சி அருகே 100 ஏக்கரில் கரும்பு சாகுபடி துவங்கி யது. இதற்காக பார் பிரிக் கும் பணி தீவிரமடைந்துள்ளது. செங்கரும்பு இல்லாத தைப்பொங்கல் இனிக்காது. அந்த அளவுக்கு பொங்கல் பண்டிகையின்போது கரும்பு முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு சில மாவட்டங்களில் மட் டும் தான் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூரை அடுத்த திருவளர்ச்சோலை பகுதி யில் கரும்பு அதிகளவு சாகு படி செய்யப்படுகிறது. இப்பகுதியில் மட்டும் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்காக திருவளர்ச் சோலை பகுதி யில் கரும்பு சாகுபடி பணி கள் தீவிரமாக நடந்து வருகின்றன. முதலில் வயலில் புழுதி உழவு செய்யப்பட் டது. தற்போது பாத்தி பாத்தியாக பார் பிரிக்கும் பணி நடந்து வரு கிறது. அதனை தொடர் ந்து நகரப் பட்டி, பாலக்குறிச்சி, தொடையூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து தலா ரூ.2.60 வீதம் வாங்கி வந்து ள்ள கரும்பு கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளன. ஒரு ஏக்கரில் சுமார் 12 ஆயி ரம் கன்றுகள் நடவு செய்யப்ப டும். பின்னர் போர்வெல் மூலம் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சப்ப டும். இன்னும் 8 மாதங்களில் பொங்கலையொட்டி அறுவடை செய்யப்படும் கரும்புகள் புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், கரூர், சென்னை உள்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். திருவளர்சோலை பகுதி யில் தற்போது கரும்பு சாகு படி பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

**பயிர்களுக்கு புத்துயிர் கோடைமழை கைகொடுக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

**திருச்சி**, : திருச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கோடை மழை கைகொடுக் குமா? என விவசாயிகள் மற் றும் பொதுக்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர். தமிழகம் முழுவதும் மார்ச் மாதம் தொடக்கத்தில் இருந்தே வெயிலின் தாக்கம் அதிகம் இருந்து வருகிறது. கடந்த 2 தினங்க ளில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 100 டிகிரிக்கு குறையாமல் வெயில் அளவு பதிவாகி இருந்தது. வேலு£ர் 106, சேலம் 105, தர்மபுரி 104, மதுரை 102, கோவை 100 டிகிரி என பதிவாகியுள்ளது. திருச்சியில் அதிகபட்சமாக வெயில் 107டிகிரி வரையிலும் பதிவாகியுள் ளது.

வழக்கமாக தமிழகத் தில் வேலூரில் தான் அதிகபட்ச வெப்பம் பதிவாகும். ஆனால் இந்த வருடம் வேலூரை மிஞ்சி திருச்சி முதலிடத்தை பிடித்துள் ளது. கடந்தாண்டு திருச்சி யில் 109 டிகிரி வரையிலும் வெப்பம் பதிவாகியிருந்தது. இதில் கத்திரி வெயில் என அழைக்கப்படும் அக்னி நட்சத்திர காலத்தில் 113 டிகிரி வரை பதிவான நிலையில் கோடை மழை கைகொடுத்ததால் உக்கிர வெயிலில் இருந்து திருச்சி மக்கள் தப் பினர்.

இதே போல் இந்த வருடமும் கோடை மழை கை கொடுத்தால் 113 டிகிரி வெயிலில் இருந்து தப்பிக்க வாய்ப்பு உள்ளது என திருச்சி மக்கள் எதிர்பார்ப் பில் இருந்தனர். இந்நிலையில் இலங் கையை ஒட்டி வங்க கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்தம் தாழ்வு நிலை உருவானதால் குமரிக் கடல் பகுதியையொட்டி தென்தமிழகத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை திருச்சி மாவட்டத்தில் மிதமான மழை பெய்தது. 2வது நாளாக நேற்றும் மதியம் மாநகர் மற்றும் புறநகரில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்தது.

கடந்த 4ம்தேதி கத்திரி வெயில் துவங்கிய நிலையில், 2 நாளாக மழை பெய்து வருவதால் வெயிலின் உக்கி ரம் குறைந்துள்ளது.

இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை அதே இடத்தில் தொடர்ந்து நீடிப்பதால் அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழகத் தில் பல இடங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோடைகாலம் தொடங்கியதில் இருந்தே கடுமை யான வெயிலால் திருச்சி மாவட்டத்தில் விவசாய பயிர்களும் கொஞ்ச, கொஞ்சமாக கருக தொடங்கின. கடந்த 2 நாட்களாக பெய்து வரும் கோடை மழையால் பயிர்களுக்கு மட்டுமல்லா மல் விவசாயிகளுக்கு புத்து யிர் அளித்துள்ளது.

கோடை மழையை நம்பி விவசாயிகள் கோடை உழவை துவங்கியுள்ளனர். சித்திரை உழவு என விவசாயிகள் அழைக்கும் கோடை உழவு செய்வதால் மண் நெகிழும் தன்மை ஏற்பட்டு மழைநீர் நிலத் திற்குள் செல்லும். இதனால் வற்றிப் போன விவசாய கிணறுக ளின் நீர் மட்டம் கொஞ்சம், கொஞ்சமாக உயரத் துவங் கும். பின்னர் பருவமழை தொடங்கும் போது நீர் மட்டம் உயர்ந்து கிணறுகள் நிரம்பி வழியக்கூடும். எனவே தற்போது பெய்து வரும் கோடை மழை தொடர்ந்து நீடித்தால் விவசாயத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர். இது மட்டுமல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக கருகி வந்த நீண்ட

காலம் பலன்தரும் தென்னை, மா மரங்கள் கோடைமழையால் மீண்டும் துளிர்விடும் நிலையில் உள்ளது.

திருச்சி மாவட்டத்தில் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஓரளவிற்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுமட்டுமல்லாமல் நகர பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் போல்வெல் கிணறுகளால் உறிஞ்சப்பட்டு அதல பாதாளத்திற்கு சென்றுள்ள நிலத்தடி நீர் மட்டம் மீண்டும் உயர வேண்டும் என்றால் கோடைமழை நீடிக்க வேண் டும் என பொதுமக்களும், விவசாயிகளும் எதிர்பார்க்கின்றனர். 118.70 மி.மீ மழை பதிவு திருச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்): லால்குடி 21, புள்ளம்பாடி 24.6, தா.பேட்டை 10, துறையூர் 1, திருச்சி ஏர்போர்ட் 2.7,திருச்சி டவுன் 6.2, நவலூர் குட்டப்பட்டு 1.2, நந்தியாறு தலைப்பு 4, சமயபுரம் 20, தேவிமங்கலம் 16.

## கரூரில் திடீர் மழை

**கரூர்,** : கரூரில் நேற்று இரவு 7 மணியளவில் திடீரென 10 நிமிடம் பெய்த மழையால் வெப்பம் ஓரளவு தணிந்தது.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுதும் பெரும்பாலான மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. ஆனால், கரூரில் மட்டும் மழை மேகம் வராமல், வெயில் வாட்டி வதக்கியது. இதனால், அனைத்துத் தரப்பு மக்களும் விரக்தியில் இருந்து வந்தனர். இந்நிலையில், நேற்று மாலை 5 மணி முதல் மழை வருவதற்கான சூழல் உருவாகி வானம் மேக முட்டத்துடன் காணப்பட்டது. 7 மணியளவில் மேகக் கூட்டங்கள் திரண்டன. இதன் பயனாக கரூரில் 10 நிமிடம் மட்டுமே மழை பெய்தது. கடும் வெயிலுக்கு மத்தியில் சிறிது நேரமாகவது மழை பெய்ததே என மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதே போல், க.பரமத்தி, கிருஷ்ணராயபுரம், தோகைமலை உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் ஓரளவு தணிந்தது.

<u>**புதுகை மாவட்டத்தில் பரவலான மழை விவசாயிகள் மகிழ்ச்சி**</u>

**புதுக்கோட்டை,** : புதுக்கோட்டை, திருமயம், விராலிமலை பகுதியில் நேற்று மாலைக்கு பிறகு 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை போதிய அளவில் பெய்யவில்லை. இதனால் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் எல்லாம் புற்கள் இல்லாமல் விளையாட்டு மைதானங்களை போல காட்சி தருகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் வறண்டும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்தும் போயுள்ளது. பல இடங்களில் குடிநீர் பஞ்சத்தால் மக்கள் குடிநீருக்காக அலைந்து போராடி வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டம் மற்றுமின்றி தமிழகத்தின் பல மாவட்டங்களில் இதே நிலைதான் நீடித்து வந்தது. இந்நிலையில் வெயிலின் தாக்கத்தில் வாடி வந்த மக்களை மேலும் வாட்டி வதைக்க சித்திரை மாத அக்னி வெயில் துவங்கியது. ஆனாலும் வருண பகவானின் ஆசியால் அக்னி அனலை கட்டுப்படுத்தும் விதத்தில் கருமேகம் சூழ்ந்து பல இடங்களில் மழை பெய்ய துவங்கியது. இலங்கையில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதியின் காரணமாக சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து குளங்களில் நீர் தேங்க துவங்கியுள்ளது. ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு குளிர்ந்த காற்று வீசினாலும், சிறு சிறு தூறல் மட்டும் அவ்வப்போது வந்துபோனது. இதனால் வெப்பம் தணிந்ததே தவிர மக்கள் மகிழ்ச்சியடையவில்லை.

இந்நிலையில் புதுக்கோட்டையில் நேற்று காலை கருமேகங்கள் சூழ்ந்து சாரல் காற்று வீசியது. பின்னர் காலை முதல் அவ்வப்போது திடீர் திடீரென விட்டு விட்டு சாரல் மழை பெய்ய துவங்கியது. மழையை பார்த்து எவ்வளவு நாளானது என்று சந்தோஷமடைந்த மக்கள் பலர் சாரல் மழையில் நனைந்து வெப்பம் தணித்து குளிர்ந்தனர்.

காலை முதல் மாலை வரை பெய்த மழையினால் சாலையோர பள்ளங்களில் நீர் தேங்கியது. குளிர்ந்த காற்று வீசியதால் கொடைக்கானல், குற்றாலம் போன்ற உணர்வை புதுக்கோட்டை மக்கள் அனுபவித்தனர். நீண்ட நாட்களுக்கு பிறகு

பெய்த மழையினால் பலர் மகிழ்ந்தனர். ஆனால் விவசாயிகள் கனமழை பெய்யாதா என்ற ஏக்கத்தில் இருந்தனர். இந்நிலையில் நேற்று மாலைக்கு பிறகு சாரல் மழை கன மழையாக மாறி சுமார் 1 மணி நேரம் பெய்தது. இதனால் சாலைகளில் நீர் வெள்ளம்போல் ஓடியது. இந்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை தந்தது. திருமயம்: திருமயம் பகுதியில் காலை முதல் மேகமூட்டத்துடன் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. ஆங்காங்கே லேசான சாரல் இருந்து வந்தது. பின்னர் மாலை 6.30 மணிக்கு மேல் சுமார் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த மழையால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

இலுப்பூர்: இதேபோல இலுப்பூர் மற்றும் விராலிமலை பகுதியில் நேற்று மாலை லேசான மழை பெய்தது. பின்னர் பலத்த மழையாக மாறியது. சுமார் 1 மணிநேரம் இந்த மழை நீடித்தது. இதனால் பூமி குளிர்ச்சி அடைந்தது. கத்தரி வெயிலின் தாக்கத்தினால் அவதியுற்று வந்த பொதுமக்கள் பூமி குளிர்ந்ததால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழை இப்பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்தது.

பொன்னமராவதி: பொன்னமராவதி பகுதியில் நேற்று கன மழை பெய்தது. இப்பகுதியில் பல மாதங்களாக கடுமையான வெப்பம் வாட்டி வந்தது. பல ஆண்டுகளாக வளர்க்கப்பட்டிருந்த தென்னை மரம், மா மரம் போன்ற மரங்கள் உட்பட செடிகள் எல்லாம் காய்ந்து கருகின. கண்மாய், குளங்கள் எல்லாம் தண்ணீர் இன்றி வறண்டு கிடந்தது. ஆடு, மாடுகள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்தன. இந்நிலையில் நேற்று காலை முதல் தொடர் அடை மழை பெய்தது. மாலை பொன்னமராவதி, கொப்பனாபட்டி, வேந்தன்பட்டி, ஆலவயல், கண்டியாநத்தம் மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமங்களில் கன மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.

## கோடை உழவு செய்தால் கோடி நன்மை

**அன்னவாசல்,** : புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள

செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே கோடை மழை பெய்து வருகிறது. இம்மழையினைப் பயன்படுத்திக் கோடை உழவு மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில், நமது பூமி வெப்ப மண்டலமாக இருப்பதால் கோடையில் மேல் மண் அதிக வெப்பமடைகிறது. இந்த வெப்பம் கீழ்ப்பகுதிக்குச் செல்லும்பொழுது நிலத்தடி நீர் ஆவியாகி வெளியேறிவிடும். மேல் மண்ணை உழவு செய்து ஒரு புழுதிப் படலம் அமைத்துவிட்டால் விண்வெளிக்கும் வேர்சூழ் மண்டலத்திற்கும் தொடர்பு அறுந்துவிடும். இதனால் நிலத்தில் உள்ள ஈரம் ஆவியாக விடாமல் இப்புழுதிப் படலம் தடுத்து விடும். சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம் என்பது கிராமத்துப் பழமொழி. கோடை மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி நிலத்தை நன்கு உழவு செய்வதால் நன்மைகள் பல கிடைக்கும். மேலும் கோடை உழவு செய்வதால் மேல் மண் துகள்களாகிறது. இதனால் மண் வெப்பத்தை உறிஞ்சி விரைவில் குளிர்ந்துவிடும். எனவே, நிலத்தில் நீர் இறங்கும் திறன் அதிகரிக்கும். கோடை உழவு செய்வதால் மண்ணில் நல்ல காற்றோட்டம் கிடைக்கும். இதனால் மண்ணில் நுண்ணுயிரிகளின் செயல்பாடு அதிகமாகி மண்வளம் பெருகும்.

வயலிலுள்ளக் களைகள் குறிப்பாக, கோரை போன்ற களைகள் கோடை உழவு செய்வதனால் மண்ணின் மேற்பரப்புக்குக் கொண்டுவரப்பட்டு சூரிய வெளிச்சத்தில் நன்கு காய்ந்து கட்டுப்படுத்தப்படுகிறது. நிலத்தினடியில் உள்ள கூண்டுப் புழுக்கள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் கோடை உழவு செய்வதனால் வெளியில் கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகிறது. இதனால் வரும் பருவத்தில் பூச்சி நோய்த் தாக்குதல் பெருமளவு குறைகிறது. கோடை உழவினைச் சரிவிற்குக் குறுக்கே உழும்பொழுது மண் அரிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. கோடை உழவு செய்யாத நிலத்தில் நீர் வேகமாக வழிந்தோடி மண் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு பல நன்மைகள் கோடை உழவினால் ஏற்படுவதால் கோடை உழவு கோடி நன்மை எனக் கூறப்படுகிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதியில் பெய்யும் கோடை மழையினைப் பயன்படுத்தித் தங்களது நிலங்களைக் கோடை உழவு செய்து மண்வளம் காத்திட வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**<u>கோடை மழையால் பருத்தி பயிர்கள் பாதிப்பு நோய் தடுக்க வழிகாட்டல்</u>**

**வலங்கைமான்** : வலங்கைமான் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி செடிகள் மழை நீர் தேங்கி வேர் அழுகல் நோயினால் பாதிக்கப்படாமல் இருக்க கார்பென்டசிம் மருந்தை பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் தெரிவித்துள்ளதாவது: வலங்கைமான் வட்டாரத்தில் கோடை பருவத்தில் சுமார் 2100 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்த கோடை மழையால் பருத்தி வயல்களில் தண்ணீர் தேங்கி உள்ளதை அடுத்து இளம் பருத்தி பயிர்கள் வேர் அழுகல் நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் தேங் கிய நீரை வடிகட்டுவதோடு நீர் வடிந்தவுடன் பருத்தியின் ஒவ்வொரு செடியின் அடியிலும் 10 - 12 கிராம் கார்பென்டசிம் மருந்தை மண்ணுடன் கலந்து இடுவதால் பருத்தி செடியி னை வேர் அழுகல் நோயி லிருந்து பாதுகாக்கலாம்.

மேலும் பருத்தி செடிகளில் உள்ள சப்பைகள் (மொக்கு) கொட்டுவதை தடுக்க பினோனோடிக்ஸ் என்ற பயிர் ஊக்கியை 135 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். மேலும் பருத்தி செடியினை தாக்கும் பூச் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நோய்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்த பூச்சி மற்றும் பூஞ்சானக் கொல்லி மருந்து தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் 50 சதவீத மான்ய விலையில் வலங்கைமான் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>கோடை உழவு தொடங்கியது வாராது வந்த மாமழை வெளிச்ச கீற்று காட்டியது டெல்டா விவசாயிகள் நெகிழ்ச்சி</u>**

**மன்னார்குடி**, : திருவா ரூர் மாவட்டத்தில் பரவ லாக மழை பெய்து வருகி றது. தற்போதைய மழையை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த சில ஆண்டுகலாக விவசாயிகள் வறட்சி மற்றும் கர்நாடகத்திலிருந்து வரவேண்டிய தண்ணீர் உரிய நேரத்தில் கிடைக்காதது போன்றவற்றால் நேரடி தெளிப்பு செய்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

சாதாரணமாக விவசாயிகள் சாகுபடி பணியை தொடங்குவதற்கு முன் கோடை காலத்திலேயே தங்களுடைய நிலத்தை உழவு செய்து பண்படுத்தி தயாராக வைத்திருப்பது வழக்கம். இதுபோல கோடை உழவு செய்து நடவு செய்யும்போது களைகள் கட்டுப்படுத்தப்படும். இதனால் பயிர் நன்றாக வளர்ந்து, மகசூல் பெருகும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழை உரிய காலத்தில் பெய்யாமலும் போதிய அளவு மழை இல்லாமலும், காவிரியில் போதிய தண்ணீரை தராமல் கர்நாடகம் இழுத்தடிப்பு செய்ததாலும், ஆறுகளில் தண்ணீர் வரத்தின்றி விவசாயிகள் பாரம்பரியமாக நிலத்தை பண்படுத்தி செய்து வந்த நெல் சாகுபடி முறையை மாற்றி நேரடி தெளிப்பில் கவனம் செலுத்த தொடங்கினர். அப்படி நேரடி தெளிப்பு செய்யப்பட்ட வயல்களில் களைகள் பெரும் பிரச்னையாக உருவெடுத்தது. களைகளை அழிப்பதற்கு களைக் கொல்லி மருந்து 80 மில்லி ரூ. 490 வரை விற்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ரூ. 1500 செலவு செய்தாலும் களைகள் கட்டுப்படவில்லை. இதனால் விவசாயிகள் இன்னலுக்கு ஆளாகி வந்தனர். இந்நிலையில் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. 5ம் தேதி மட்டும் திருவாரூரில் 23 மி.மீ, முத்துப்பேட்டையில் 58மி.மீ, திருத்துறைப்பூண்டியில் 24.மி.மீ, குடவாசல்16, மன்னார்குடி, நீடாமங்கலத்தில் 6மி.மீ, வலங்கைமானில் 12.30,மி.மீ, பாண்டவையாறு தலைப்பில் 9.60 மிமீ என சராசரியாக 19.52 மிமீ மழை பெய்தது. நேற்று 6ம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கி மதியம் ஒரு மணி வரையில் மன்னார்குடியில் சுமார் 30.மிமீ முத்துப்பேட்டையில் 10.மிமீ மழையும் பெய்துள்ளது. மேலும் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்கியதால் வறட்சியை சமாளிப்பது குறித்த அச்சத்தல் விவசாயிகள் இருந்தனர்.தற்போது பெய்துள்ள மழை போனசாக அமைந்துள்ளது. இந்த மழையால் விவசாய நிலங்கள் குளிர்ச்சியடைந்துள்ளது. இதை பயன்படுத்தி நிலத்தை கோடை உழவு செய்வது எளிதாக இருக்கும். அதுபோல கோடை உழவு செய்து நிலத்தை பண்படுத்தினால் நிலத்தில் உள்ள களைச்செடிகள் மற்றும் களை விதைகள் அழிந்து விடும். அதனால் நேரடி தெளிப்பு செய்தாலும் களைகள் முளைப்பது குறையும். இதையடுத்து கோடை உழவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இது குறித்து நீடாமங்கலத்தைச் சேர்ந்த விவசாயி ராமலிங்கம் கூறியதாவது; கோடை உழவு என்பது குறைந்து போய்விட்டதால் களைகள் அதிகரித்து மகசூல் குறைவு ஏற்படுவதும் முளைத்த

களைகளை அழிப்பதற்கு செய்யும் செலவும் குறைய வாய்ப்புள்ளது. எனவே தற்போதைய மழையால் மரம், செடிகள் வளர்ந்து கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கும். கோடைகாலத்தில் உழவு செய்ய நல்ல வாய்ப்பாக இருப்பதால் நிலத்திற்கு உரமிடுகின்ற மழையாக இது உள்ளது என்றார்.

இந்த கோடை மழையால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். மேலும் கால்நடைகளுக்கு தீவனம், மற்றும் தண்ணீர் தேவை ஓரளவு நிறைவு பெறும். கோடை உழவால் செலவு குறையும், இது போலவே பருவமழையும் தங்களுக்கு கை கொடுக்கும். இந்த மழை தங்கள் வாழ்க்கையில் ஒரு வெளிச்ச கீற்று போல உள்ளதாக டெல்டா விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## விவசாயிகளுக்கு வழிகாட்ட நிலக்கடலை விலை குறித்து சந்தை தகவல் மையம் கணிப்பு

**திண்டுக்கல்**, : நிலக்கடலை விலை குறித்து வேளாண் பல்கலைக்கழக சந்தை தகவல் மையம் ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது.

உலகளவில் எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலை ஒரு முக்கியப் பயிராகும். 2013-14ம் ஆண்டில் மொத்த நிலக்கடலை உற்பத்தி சுமாராக 39.34 மில்லியன் டன்களாகும். இந்தியாவில் இந்த ஆண்டு கரீப் பருவத்தில் 47.15 லட்சம் டன்கள் உற்பத்தி ஆனது.

தமிழ்நாட்டில் நிலக்கடலை பயிரிடும் பரப்பு 3.85 லட்சம் எக்டேராகும். இதன் உற்பத்தி 10.60 லட்சம் டன்னாக இருந்தது. தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தித்திறன் எக்டேருக்கு 2751 கிலோ ஆகும். தமிழ்நாட்டில் தைப்பட்டம் நிலக்கடலை விதைப்பிற்கு மிக முக்கியமானது.

இப்பட்டத்தில் விதைத்த நிலக்கடலை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. தற்போது கடலை விலை உயர வாய்ப்புகள் உள்ளதா, அல்லது இருப்பு வைக்கலாமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே உள்ளது. இவர்களுக்கு வழிகாட்டும வகையில் வேளாண்மை பல்கலைக்கழக சந்தை தகவல் மையம் சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 21 ஆண்டுகளாக நிலவிய நிலக்கடலை விலைகள் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின்படி இம்மாதம் நிலக்கடலை சேவூர் சந்தையில் கிலோவிற்கு ரூ.32.34ஆகவும், திண்டிவனம் சந்தையில் கிலோவிற்கு ரூ.31.33வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டள்ளது என்று மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

**<u>நத்தம் பகுதியில் அக்னியை தணிக்கச் செய்யும் கோடைமழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**நத்தம்**, : அக்னி வெப்பத்தை தணிக்கச் செய்யும் கோடைமழையால் நத்தம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

நத்தம் பகுதியானது முற்றிலும் விவசாயத்தை சார்ந்த பகுதியாகும். இப் பகுதிகளில் மா, தென்னை, புளி போன்ற மர வகைகள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மானாவாரியாக சோளம், மொச்சை, கேழ்வரகு, உளுந்து, எள் போன்ற பயிர்வகைகள் பயிரிடப்பட்டும் வந்தது. கடந்த வருடம் முதல் சரியாக பருவமழை பெய்யாமல் இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 3 மாதங்களாக இப்பகுதிகளில் வெப்பம் தாங்க முடியா மல் தென்னை, மா மரங்கள் கூட பட்டுப்போகும் அளவி ற்கு வறட்சி மேலோங்கியது. விவசாயிகள் ஆழ் துளை கிண று அமைத்தும் போதிய தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் விவசாயிகள் தங்கள் மரங்களை தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி காப்பாற்றும் சூழ்நிலை இருந்தது. தற்சமயம் அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதல் வெப்பம் அதிக மாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீரென கோடை மழை பெய்யத் துவங்கியுள்ளது. இது தொடர்ந்து பெய்து அக்னி வெயிலின் வெப்பத்தை இல்லாமல் செய்து தணித்து விட்டது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஆனால் கோடை மழை கனமாகப் பெய்து கண்மாய், குளங்களில் நீர் நிறைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். இதுகுறித்து இப்பகுதியைச் சேர்ந்த விவசாயி சின்னு கூறுகையில், ‘கோடை மழை பெருமழையாக எதுவும் பெய்யாத நிலையில் சாரலாக அவ்வப்போது பெய்கிறது. இதனால் அக்னி வெப்பம் தணிந்துள்ளது. பூமி குளிர பெருமழையாகவும் கண்மாய், குளங்களில் நீர் தேங்கும் அளவிற்கும் பலத்த மழைதான் வறட்சியின் தாக்கத்திலிருந்து தென்னை,மா மரங்கள் விடுபட்டு செழிக்கச் செய்யும்’ என்றார்.

**<u>வறட்சி மாவட்டம் குளிர்ந்தது கொட்டியது?கோடை?மழை</u>**

**ராமநாதபுரம்**, : ராமநாதபுரம் மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்றும் கோடை மழை கொட்டியது. நேற்று ராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, திருவாடானை, தொண்டி உள்ளிட்ட பகுதிகளிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் பலத்த மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் அக்னி நட்சத்திரத்தின் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவி வருவதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் ஏப்.29ல் மழை துவங்கியது. கமுதி, பார்த்திபனூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அன்று அரை மணி நேரத்திற்கும் மேலாக கனமழை கொட்டியது. தொடர்ந்து கமுதியில் 4 நாட்களுக்கும் மேலாக மழை நீடித்தது. பின்னர் கடந்த 4ம் தேதி முதல் ராமநாதபுரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளிலும் மழை துவங்கியது.

ராமநாதபுரத்தில் அதிகபட்சமாக நேற்று காலை 8 மணி வரை 50.6 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. நேற்றும் மழை நீடித்தது.

ராமநாதபுரம் அரசு மருத்துவமனை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் மதுரை- ராமேஸ்வரம் செல்லும் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கேணிக்கரை, பாரதி நகர், ஓம்சக்தி நகர் மற்றும் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள விளையாட்டு மைதானம், பசும்பொன் நகர், எம்எஸ்கே நகர் உள்ளிட்ட பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது.

பரமக்குடியில் நேற்று பகல் 4 மணி நேரம் இடியுடன் பலத்த மழை கொட்டியது. ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை, காமராஜர் நகர், ஆர்ச் பகுதி, புனித அலங்கார அன்னை ஆலயம், பரமக்குடி முதுகுளத்து£ர் சாலை, உழவர்சந்தை சாலை உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. நேற்று பகல் முழுவதும் மேகங்கள் சூழ்ந்து வானம் இருண்டு காணப்பட்டது. வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடி சென்றன.

திருவாடானை தாலுகாவில் தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களாக வானில் கருமேகங்கள் திரண்டன. குளிர்ச்சியான காற்று வீசிய போதும், எதிர்பார்த்த அளவு மழை இல்லாமல் இருந்தது.

இந்நிலையில் நேற்று காலை திருவாடானை, தொண்டியில் நல்ல மழை பெய்தது. பகல் முழுவதும் அவ்வப்போது பெய்த மழையால் இப்பகுதிகளில் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. ராமேஸ்வரத்தில் நேற்று காலை முதல் வானம் இருண்டு காணப்பட்டது. பின்னர் மாலை 6 மணிக்கு லேசான சாரலுடன் துவங்கிய மழை, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. கமுதி, பரமக்குடி, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 4 நாட்களுக்கும் மேலாக மழை நீடித்து வருவதால் கண்மாய்கள், குளங்களில் ஓரளவு தண்ணீர் தேங்கியுள்ளது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இன்னும் 2 நாட்கள் மழை நீடிக்கும் பட்சத்தில் கோடை விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மேலும் கடந்த ஒரு வாரம் முன்பு வரை மாவட்டத்தில் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. தற்போது பெய்து வரும் இந்த மழையால் அடுத்து வரும் 15 நாட்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு வெகுவாக குறையும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கமுதியில் நேற்று காலை 8 மணிக்கு துவங்கிய மழை பகல் முழுவதும் நீடித்தது. கமுதி கோட்டைமேட்டில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தோட்டக்கலை துறை அலுவலகம் பழைய யூனியன் அலுவலக கட்டிடத்தில் உள்ளது. இந்த கட்டிடத்தின் முன்பகுதியில் உர மூடைகள், வேளாண்மை இடு பொருட்கள் மற்றும் விதைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த வளாகத்தில் நேற்று மழை நீர் புகுந்ததால் இந்த மூடைகள் அனைத்தும் நனைந்து சேதமடைந்து விட்டன. மேலும் பழைய கட்டிடம் என்பதால், மேற்கூரையிலிருந்தும் தண்ணீர் ஒழுகியதில் ஆவணங்கள், இயந்திரங்கள், கம்ப்யூட்டர்கள் ஆகியவையும் சேதமடைந்து விட்டன.

**<u>மானாமதுரை சுற்று வட்டாரத்தில் தொடர்மழையால் கோடை உழவுப்பணிகள் துவக்கம்</u>**

**மானாமதுரை,** : மானாமதுரை சுற்றுவட்டாரப்பகுதியில் தொடர்ந்து பெய்த மழையால் வவிவசாயிகள் உழவுப்பணிகளை துவங்கியுள்ளனர்.

மானாமதுரை தாலுகாவில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் மழையை நம்பியே மானாவாரி நிலங்களில் விவசாயப்பணிகள் நடந்து வருகிறது.

20 சதவீதத்திற்கும் குறைவான அளவிலே தான் ஆற்றுப்பாசனத்திலும், கிணற்றுப்பாசனத்திலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. மழையை நம்பி பயிரிட்ட நெல் நாற்றுகள் கருகின. நிலத்தடி நீரும் வற்றியதால் கிணற்றுப்பாசனம் மூலம் வெண்டை, கத்தரி, மிளகாய், பருத்தி சாகுபடி செய்யும் பணிகளும் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்த மழை பெய்தது. நீரின்றி வறண்டு பாளம்பாளமாக காட்சியளித்த கண்மாய், குளங்களுக்கு தண்ணீர் வரத்துவங்கியுள்ளது. இதுவரை பெய்த மழையளிவில் கடந்த சனி 42 மில்லிமீட்டரும், ஞாயிறு 12 மில்லிமீட்டரும், திங்கள்கிழமை 37 மில்லிமீட்டரும் பெய்துள்ளது. இதனால் விவசாய நிலங்களில் விவசாயிகள் கோடை உழவுப்பணிகளை துவக்கியுள்ளனர்.

இது குறித்து விவசாயி திருப்பதி கூறுகையில்., கோடை காலத்தில் சாகுபடி பணிகள் பெரும்பாலும் துவங்குவது இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக பயிரிட்ட நெல்பயிர்கள் சாவியாகி போய்விட்டன. வயலில் அவற்றை அறுக்காமல் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்காக விட்டுவிட்டோம்.

தற்போது தொடர்ந்து நல்ல மழை பெய்து வருவதால் வயலில் தேங்கியுள்ள நீரில் களைச்செடிகள் முளைக்கத் தொடங்கிவிடும். களைச்செடிகள் மண்ணில் உள்ள உயிர்ச்சத்துக்களை எடுத்துவிடும். கால்நடைகளின் எருக்களும் மண்ணிற்கு ஊட்டம் தருவதால் உழுவது அவசியம்.

மேலும் நிலத்தில் குறிப்பிட்ட அளவு ஆழத்திற்கு உழுவதால் மழைநீர் சென்று மண்ணின் தன்மையை பாதுகாக்கும். அதற்காக கோடைஉழவுப்பணிகளை துவக்கியுள்ளோம் என்றார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தக்கோரிய முல்லை பெரியாறு அணை வழக்கில் இன்று இறுதி தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டு வழங்குகிறது**



**புதுடெல்லி,**

முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தக்கோரியும், கேரள அரசின் அணை பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிட வலியுறுத்தியும் சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கின் இறுதி தீர்ப்பை 5 பேர் அடங்கிய அரசியல்சாசன அமர்வு இன்று வழங்குகிறது.

**முல்லை பெரியாறு அணை**

கடந்த 2006–ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பின்படி முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த கேரள அரசு தவறியது. மாறாக, அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக குறைத்து கேரள அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

அணை பலவீனமாக இருப்பதாக கூறி, முல்லை பெரியாறு அணையின் அருகே புதிய அணை ஒன்றை கட்டுவதற்கு ஏதுவாக கேரள சட்டசபையில் அணை பாதுகாப்பு சட்டம் என்ற ஒரு புதிய சட்டத்தை அம்மாநில அரசு நிறைவேற்றியது.

இதன் மூலம் ஒரு மாநில அரசின் முடிவுகளில் அண்டை மாநிலங்கள் தலையிடக்கூடாது என்றும் அந்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஆனந்த் குழு ஆய்வு

இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டின் ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் குழு ஒன்றை நியமித்து அணையில் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதன்படி ஆனந்த் தலைமையிலான குழு அளித்த அறிக்கையில், அணை மிகவும் பலமாக உள்ளது என்றும், நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்றும், அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அறிக்கை தரப்பட்டது.

## இன்று இறுதி தீர்ப்பு

இந்த அறிக்கையை ஏற்க கேரள அரசு மறுப்பு தெரிவித்தோடு புதிய குழுவை நியமிக்க வேண்டுமென கோர்ட்டில் வலியுறுத்தியது.

கேரள அரசின் இந்த வாதத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், சுப்ரீம் கோர்ட்டு நியமித்த இந்த குழுவானது ஏசி அறையில் அமர்ந்து அறிக்கை தயாரிக்கவில்லை என்றும், நேரடியாக களத்தில் இருப்பதை கண்டறிந்து அறிக்கையாக தாக்கல் செய்தனர் என்றும் நீதிபதி ஆர்.எம்.லோதா தெரிவித்து இருந்தார்.

இந்த வழக்கின் மீதான இறுதிக்கட்ட விசாரணை கடந்த ஆண்டு ஆகஸ்டு 20–ந் தேதி முடிவடைந்த நிலையில், 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல்சாசன அமர்வு இன்று தீர்ப்பு வழங்குகிறது.

**<u>தஞ்சை மாவட்டத்தில் 2-வது நாளாக மழை அதிகபட்சமாக அணைக்கரையில் 52 மி.மீ. பதிவானது</u>**

**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் 2-வது நாளாக பரவலாக கோடை மழை பெய்தது. அதிகபட்சமாக அணைக்கரையில் 52 மில்லி மீட்டர் பதிவானது.

**<u>கோடைகாலம்</u>**

கோடைகாலம் தொடங்கியது முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வெயில் 104 டிகிரிக்கும் அதிகமாக கொளுத்தியது. தொடர்ந்து பல நாட்கள் 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் கொளுத்தியது. இதனால் மக்கள் வெயிலின் தாக்கத்தால் கடும் அவதிப்பட்டனர். பகல் நேரத்தில் தான் வெயில் இப்படிகொளுத்துகிறது என்றால் இரவிலும் வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருந்தது.

இந்த நிலையில் கோடைவெயிலின் உச்சகட்டமான அக்னிநட்சத்திரம் எனப்படும் கத்திரிவெயில் கடந்த 4-ந்தேதி தொடங்கியது. அன்று முதல் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முதல் நாள் லேசான மழை பெய்தது. அக்னிநட்சத்திரம் தொடங்கிய நாளில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால் மழை பெய்யவில்லை.

**<u>பரவலாக மழை</u>**

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை மழை பெய்தது. அதன் பின்னர் மழை இன்றி வானம் மேக மூட்டமாக காட்சி அளித்தது. நேற்று 2-வது நாள் காலை வழக்கம் போல் வெயில் அடித்தது. இந்த நிலையில் திடீரென வானம் மேகமூட்டமாக காட்சி அளித்தது. மதியம் 12 மணி அளவில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. அதன் பின்னர் 1 மணி முதல் லேசான தூறலுடன் மழை பெய்தது. விட்டு, விட்டு மழை தூறிக்கொண்டே இருந்தது. தஞ்சை மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருவதால் கோடைநெல் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>மழைஅளவு</u>**

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

கல்லணை 22, கும்பகோணம் 15, பாபநாசம் 25, தஞ்சாவூர் 3.4, திருவையாறு 35.2, திருக்காட்டுப்பள்ளி 17.2, அய்யம்பேட்டை 8, மஞ்சளாறு 35.8, பூதலூர் 12.6, பட்டுக்கோட்டை 2, அணைக்கரை 52, பேராவூரணி 7.2, வல்லம் 3.

**<u>சேலம் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**சேலம்,**

சேலம் மாவட்டத்தில் நேற்று இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>சேலத்தில் மழை</u>

கோடை காலம் தொடங்கியதால் சேலம் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக வெயில் கொளுத்தி வருகிறது. இந்த நிலையில் கோடைகாலத்தின் உட்சகட்டமான அக்னி நட்சத்திர வெயில் காலம் கடந்த 4–ந்தேதி தொடங்கியது. இதனால் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உருவானதால் பொதுமக்கள் கவலையடைந்தனர். அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில் மழை பெய்ய வேண்டும் என்று சில கோவில்களில் சிறப்பு யாகங்கள் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் அக்னி நட்சத்திர வெயில் தொடங்கிய அன்றே சேலம் நகரில் லேசான மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் சற்று குறைந்தது. நேற்று பகல் நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

பிற்பகலில் கருமேகங்கள் திரண்டன. சேலம் மாநகரில் சூறைக்காற்றுடன் 20 நிமிடங்கள் மழை பெய்தது. அப்போது வீசிய பலத்த காற்றினால் முள்ளுவாடி ரெயில்வே கேட்டின் ஒரு பகுதி முறிந்து சாலையில் விழுந்தது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

சேலத்தில் சில இடங்களில் மழைநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. சில பகுதிகளில் கடைகளில் தண்ணீர் தேங்கி நின்றது. திடீர் மழை காரணமாக சேலம் மாநகர பகுதியில் வெயிலின் தாக்கம் முழுமையாக குறைந்தது. நேற்று மாலை குளிர்க்காற்று இதமாக வீசியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதேபோல் இடைப்பாடி பகுதியில் நேற்று இடி–மின்னலுடன் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது. தேவூர் சுற்றுவட்டாரத்தில் காவிரி கரையோர கிராமங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது. கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த இந்த பகுதியில் இடி–மின்னலுடன் கனமழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**<u>ஈரோடு மாவட்டத்தில் பலத்த மழை</u>**



**ஈரோடு,**

ஈரோடு மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது. கொடுமுடி ஈரோடு மாவட்டத்தில், நேற்று காலையில் இருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. குளிர்ந்த காற்றும் வீசியது. இந்தநிலையில் மாலை 4 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. கொடுமுடி, சிவகிரி, அம்மாபேட்டை, அறச்சலூர், மொடக்குறிச்சி, அம்மாபேட்டை, புஞ்சைபுளியம்பட்டி, பவானி, கோபி, சத்தியமங்கலம், ஊஞ்சலூர்,

கணபதிபாளையம் நால்ரோடு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1 மணிநேரம் விடாமல் கொடுமுடியில் நேற்று பகல் 2 மணிக்கு வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. பின்னர் கொடுமுடி, சாலைப்புதூர், வருந்தியாபாளையம், சோளக்காளிபாளையம் ஆகிய பகுதிகளில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் பெய்த இந்த மழையால் ரோட்டில் மழைநீர் தேங்கி நின்றது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது.

<u>சிவகிரி, அம்மாபேட்டை</u>

சிவகிரி அருகே உள்ள வேட்டுவபாளையம், கந்தசாமிபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகல் 3 மணி அளவில் பலத்த இடி, மின்னலுடன் சாரல் மழை பெய்யத்தொடங்கியது. இந்த சாரல் மழை பிற்பகல் 3.45 மணி வரை நீடித்தது. இந்த சாரல் மழையால் மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் கரும்பு சாகுபடி செய்திருக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அம்மாபேட்டை, குருவரெட்டியூர், சித்தார், நெரிஞ்சிப்பேட்டை ஆகிய பகுதிகளில் நேற்று பிற்பகலில் இடியுடன் கூடிய லேசான சாரல் மழை பெய்தது.

<u>அறச்சலூர், மொடக்குறிச்சி</u>

அறச்சலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான அவல்பூந்துறை, வடபழனி, வடுகப்பட்டி ஆகிய இடங்களில் நேற்று பிற்பகல் 3.10 மணி முதல் 3.30 மணி வரை லேசான சாரல் மழை பெய்தது.

மொடக்குறிச்சி, எழுமாத்தூர், கணபதிபாளையம், ஊத்துக்குளி, ஆகிய பகுதிகளில் காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கிய சாரல் மழை 3 மணி வரை நீடித்தது. தொடர்ந்து இந்த பகுதிகளில் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது.

<u>புஞ்சைபுளியம்பட்டி</u>

புஞ்சைபுளியம்பட்டி, புங்கம்பள்ளி, காவிலிபாளையம், பனையம்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று பகல் 2 மணிக்கு லேசான சாரல் மழை

பெய்தது. மாலை 5 மணிக்கு இந்த சாரல் சற்று பலத்த மழையாக பெய்தது. இடியுடன் பெய்த இந்த மழை விட்டு விட்டு தூறிக்கொண்டே இருந்தது. இதனால் இந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பலத்த மழை பெய்யாதா? என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

<u>பவானி</u>

பவானியில் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிறகு மாலை 4 மணி முதல் 4.30 மணி வரை லேசான சாரல் மழை பெய்தது. வெள்ளித்திருப்பூர், அந்தியூர், பருவாச்சி, அத்தாணி ஆகிய பகுதிகளில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. பிறகு மாலை 4 மணி முதல் சாரல் மழை பெய்தது.

<u>கோபிசெட்டிபாளையம்</u>

கோபிசெட்டிபாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் கடந்த சில மாதங்களாக கடுமையான வெயில் சுட்டெரித்தது. அனல்காற்று வீசியது. இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை பலத்த காற்று வீசியது. பொதுமக்கள் மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால் மழை பெய்யாமல் ஏமாற்றியது.

நேற்றுக்காலையில் இருந்தே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. காலையில் சிறிதுநேரம் சாரல் மழை பெய்தது. இந்தநிலையில் நேற்று மாலை 5 மணிக்குமேல் கருமேகங்கள் சூழ்ந்தன. 4.35 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை 5 மணிவரை சுமார் அரை மணிநேரம் பெய்தது. அப்போது குளிர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இதேபோல் நம்பியூரில் நேற்று மாலை 5 மணியில் இருந்து 5.30 வரை மழை பெய்தது. நீண்ட நாட்களுக்கு பின்னர் மழை பெய்ததால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. இதேபோல் சத்தியமங்கலத்தில் நேற்று மாலை ½ மணி மழை பெய்தது.

**<u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: முல்லைப்பெரியாறு அணைக்குநீர்வரத்து அதிகரிப்பு</u>**



**கூடலூர்,**

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து 840 கன அடியாக உயர்ந் துள்ளது.

<u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை</u>

தேனி மாவட்டம் கூடலூர் அருகே முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ளது. இந்த அணையின் மூலம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்கள் இரு போக பாசன வசதி பெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால் அணையில் தண்ணீர் இல்லாமல் இரு போக நெல் சாகுபடி பாதிக் கப்பட்டது. இந்த ஆண்டாவது தண்ணீர் திறந்து விடப்படுமா? என்ற எதிர்பார்ப்பில் விவ சாயிகள் இருந்தனர்.

கடந்த சில நாட்களாக முல்லைப்பெரியாறு அணை யின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதை யடுத்து நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கடந்த 1–ந்தேதி 109.60 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் தற்போது 110.30 அடியாக உயர்ந்துள்ளது. நேற்று மாலை முதல் லோயர்கேம்ப், குமுளி, தேக்கடி, பெரியாறு ஆகிய பகுதிகளில் மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரித்தது.

<u>840 கன அடியானது</u>

அணைக்கு 100 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று ஒரே நாளில் 841 கன அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து தேனி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக வினா டிக்கு 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.அணை யில் 959 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

நேற்று முன்தினம் நிலவரப் படி, முல்லைப்பெரியாறு அணையில் 40 மி.மீ., தேக்கடி யில் 22.4 மி.மீ., சண்முகாநதி அணையில் 3 மி.மீ., உத்தம பாளையத்தில் 2 மி.மீ., வீர பாண்டியில் 12 மி.மீ., வைகை அணையில் 16 மி.மீ., மஞ்சளாறு அணையில் 11 மி.மீ., சோத்துப்பாறை அணையில் 24 மி.மீ., பெரியகுளத்தில் 10 மி.மீ., போடியில் 10 மி.மீ., கொடைக்கானலில் 11.6 மி.மீ. மழை அளவு பதிவாகிஉள்ளது.

**<u>திருப்பூர், அவினாசி, பல்லடத்தில் கொட்டித்தீர்த்த கோடை மழை</u>**



**திருப்பூர்,**

திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை வெயில் மக்களை வாட்டி வதைத்தது. இந்தநிலையில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத் துடன் காணப்பட்டது.

மேலும் காலை முதல் மதியம் வரை லேசான சாரல் மழை அவ்வப்போது பெய் தது. மாலை 3 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்தது. இதனால்

திருப்பூர் மாநகரமே குளிர்ந் தது.கடந்த சிலநாட்களாக கோடை வெயிலால் அவதிப் பட்டு வந்த பொது மக்கள் இந்த கோடை மழையால் மனம் குளிர்ந்தனர். இதுபோல் பல்லடம், பொங்கலூர், அவி னாசி, குன்னத்தூர், ஊத்துக் குளி மற்றும் அதன் சுற்றுப் பகுதியிலும் நேற்று மாலை 3½ மணி அளவில் கோடை மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் பெய்த இந்த மழையால் விவசாயிகளும் பொது மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**எள் சாகுபடியில் நவீன தொழில்நுட்ப முறைகள்**



எண்ணெய்வித்து பயிர்களில் நிலக்கடலைக்கு அடுத்தபடியாக சாகுபடி செய்யப்படும் பயிர் எள் ஆகும். எளிமையான சில நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெற முடியும். தமிழகத்தில் 2.5 லட்சம் ஏக்கருக்கு அதிகமாக எள் சாகுபடி செய்யப்படுகிறது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 100 முதல் 200 கிலோ வரை கிடைக்கிறது. ஆனால் ஏக்கருக்கு 800 கிலோ வரை அதாவது 4 மடங்கு கூடுதல் மகசூல் பெற சில எளிய தொழில்நுட்பங்கள் வேளாண்மை துறையால் பரிந்துரை செய்யப்படுகிறது.

சிறந்த ரகங்கள்

இறவை பயிருக்கு தை முதல் மாசி பட்டம், சித்திரை பட்டம் மிகவும் ஏற்றதாகும். தை முதல் மாசி பட்டத்திற்கு டி.எம்.வி–3, டி.எம்.பி–6, கோ–1, வி.ஆர்.ஐ–1, பையூர்–1 ஆகிய ரகங்கள் சிறந்தவை ஆகும். பங்குனி, சித்திரை பட்டத்திற்கு டி.எம்.வி–3, டி.எம்.வி–4, டி.எம்.வி–6, கோ–1, வி.ஆர்.ஐ–1, எஸ்.வி.பி.ஆர்–1 ஆகிய

ரகங்கள் பரிந்துரை செய்யப்படுகிறது. அனைத்து ரகங்களுக்கும் ஏக்கருக்கும் 2 கிலோ விதை போதுமானது. விதையை மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

விதைநேர்த்தி

விதை மூலம் பரவும் நோயை தடுக்கவும், மண் மூலம் பரவும் நோயை கட்டுப்படுத்தவும் விதை நேர்த்தி அவசியமானதாகும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் மருந்து கலக்க வேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற நன்மை செய்யும் பூஞ்சாணம் மூலம் விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைநேர்த்தி செய்து 12 மணி நேரம் வைத்திருந்த பின்னர் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு பொட்டலம் (200 கிராம்) அசோஸ்பைரில்லம், ஒரு பொட்டலம் (200 கிராம்) பாஸ்போபாக்டீரியா விதையுடன் கலந்து விதைக்க வேண்டும்.

உயிர் உரங்கள்

இதனால் தழைச்சத்து பயிருக்கு கூடுதலாக கலந்து விதைக்க வேண்டும். இதன் மூலம் தழைச்சத்து பயிருக்கு கூடுதலாக கிடைக்க வழி வகுக்கிறது. உயிர் உரங்கள் விதையுடன் நன்கு கலப்பதற்கு குளிர்ந்த அரிசிக்கஞ்சியை சிறிதளவு சேர்க்கலாம். முதலில் விதை நேர்த்தி செய்து விட்டு அதன் பின்னர் 12 மணி நேரம் கழித்து உயிர் உரங்களை கலந்து ஈரம் உலர்ந்ததும் விதை விதைக்க வேண்டும். விதை விதைத்த பின்னர் ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீசு சல்பேட்டை மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். இந்த நுண்ணோட்டம் எள் மகசூலை அதிகரிக்கவும், எண்ணெய் சத்தை அதிகரிக்கவும் பயன்படுகிறது.

இடைவெளி

ஒரு செடிக்கும், மற்றொரு செடிக்கும் இடையே ஒரு அடி இடைவெளியும், ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் இடையே ஒரு அடி இடைவெளியும் இருக்க வேண்டும். விதைத்த 15–வது நாளில் செடிக்கு ½ அடி இடைவெளி இருக்கும் படியும். 30–வது நாளில் செடிக்கு செடி ஒரு அடி இடைவெளி உள்ளவாறும் வைத்து மற்ற செடிகளை பிடுங்கி விட வேண்டும். எள் பயிரில் பயிர் கலைத்தல் ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும்

என்பதை விவசாயிகள் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 11 செடிகள் இருப்பது அவசியமாகும். செடி கலைக்கும் போது வயலில் ஈரம் இருப்பது நல்லது.

உர அளவு

இறவை எள் பயிருக்கு 14:9:9 தழை, மணி, சாம்பல் சத்துகளை கொண்ட யூரியா 30 கிலோ, சூப்பர் 55 கிலோ, பொட்டாஷ் 15 கிலோ ஆகிய உரங்களை இட வேண்டும். எள் பயிருக்கு அனைத்து உரங்களையும் அடி உரமாக இட வேண்டும். விதைத்த 25–ம் நாளில் ஒரு முறையும், தேவைப்படுமானால் 35–வது நாளில் ஒரு முறையும் என 2 முறை களை எடுக்க வேண்டும். களை எடுத்த பின்பு 2 அல்லது 3 நாட்கள் கழித்து நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 20–வது நாளில் கொண்டைப்புழு தாக்குதல் தென்படும். இந்த புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்றாக பிணைத்து, அதில் இருந்து கொண்டு பூ, இளம் காய்கள், குறுத்துகளை உண்ணுகின்றன. இதை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை 6 கிலோவை இடித்து ஒரு நாள் ஊற வைத்து, காதிசோப் கலந்து தெளிக்கலாம். அல்லது பாசலோன், குயினாலபாஸ், டைக்குளேர்வாஸ் போன்ற மருந்துகளை தேவை ஏற்படும் போது பயன்படுத்தலாம்.

நீர் நிர்வாகம்

விதைத்த 7 நாட்கள் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் முன்பும் (20 முதல் 25–வது நாள்), பூக்கும் தருணத்திலும் (35 முதல் 55–வது நாள்) தண்ணீர் மிக அவசியமானதாகும். அதன் பின்னர் காய் பிடிக்கும் போது (55 முதல் 65–வது நாள்) நீர் தேவைப்படும். 65 நாட்களுக்கு பின்பு பொதுவாக பாசன நீர் வேண்டியதில்லை. அதிக தண்ணீர் பயிர் இலை வளர்ச்சியை தூண்டி மகசூல் குறைய ஏதுவாகும். எள் காயின் மத்திய பகுதி பழுந்தடைந்துவிடுவதும், தண்டு மஞ்சள் நிறமாகிவிடுவதும் அறுவடையின் அறிகுறியாகும். செடிகளின் அடியில் இருந்து 10–வது காயை பறித்து உடைத்து பார்த்தால் விதை கருப்பாக மாறி இருக்குமானால், அறுவடைக்கு தயாராகிவிட்டது என்று அறிந்து கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் மேற்கண்ட நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்றி எள் சாகுபடி செய்து அதிக அளவு மகசூலினை பெறலாம்.

**<u>திருவாரூர் மாவட்டத்தில் 4-வது நாளாக பலத்த மழை</u>**



திருவாரூர் மாவட்டத்தில் நேற்று 4-வது நாளாக பலத்த பெய்தது. முத்துப்பேட்டையில் அதிகபட்சமாக 58 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

<u>தொடர் மழை</u>

திருவாரூர் மாவட்டத்தில் கோடை காலம் தொடங் குவதற்கு முன்னதாகவே வாட்டி வதைத்து வந்த வெயில், அக்னி நட்சத்திரம் தொடங்கிய பிறகு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் கடந்த 30-ந் தேதி முதல் நேற்று வரை மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது.

4-ந் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கிய பின்னரும் மழை விடாமல் பெய்து வருகிறது. நேற்று 4-வது நாளாக திரு வாரூர், வலங்கைமான், முத்துப் பேட்டை, திருத்துறைப் பூண்டி உள்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மழை பெய்தது.

<u>முத்துப்பேட்டையில்...</u>

திருவாரூரில் நேற்று காலை 8 மணி அளவில் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து 1 மணி நேரம் மழை நீடித்தது. இதேபோல் கொரடாச்சேரி, அதை சுற்றி உள்ள கிராமங் களில் பலத்த மழை பெய்தது. முத்துப்பேட்டையில் நேற்று அதிகாலை தொடங்கிய மழை மாலை 3 மணி வரை நீடித்தது. கூத்தாநல்லூர், வலங்கைமான், நன்னிலம், குடவாசல், திருத் துறைப்பூண்டி ஆகிய பகுதி களிலும் நேற்று பல மணி நேரம் மழை பெய்தது.

மழை நிலவரம்

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் முத்துப்பேட்டையில் அதிக பட்சமாக 58 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் மழைப்பொழிவு விவரம் மில்லி மீட்டர் அளவுகளில் வருமாறு:-

திருவாரூர்- 23, குடவாசல் - 16, மன்னார்குடி-6, நன்னிலம் - 20, நீடாமங்கலம் - 6, திருத்துறைப்பூண்டி 24, வலங்கைமான் - 12, பாண்ட வையாறு தலைப்பு -10. மாவட்டத்தின் சராசரி மழை அளவு 20 மில்லி மீட்டர் ஆகும்.

தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

முத்துப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங் களில் ஏராளமான விவசா யிகள் தென்னை பயிர் செய் துள்ளனர்.

தொடர்ந்து 4 மாதங்களாக வெயில் அடித்ததால், தென் னை விவசாயிகள் கலக்கம் அடைந்தனர்.

தண்ணீர் இன்றி தென்னை காய்ந்து விடுமோ என்ற அச் சம் நிலவியது. இந்த நிலையில் தொடர்ந்து 4 நாட் களாக முத்துப்பேட்டை பகுதி களில் மழை பெய்து வருவதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை கத்திரி வெயிலின் தாக்கம் குறைந்தது**

**கடலூர்,**

கடலூர் மாவட்டம் முழுவதும் நேற்று 3–வது நாளாக மழை பெய்தது. இதன் காரணமாக கத்திரி வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

(ஆடுமேட்டர்......) நேற்று மாவட்டம் முழுவதும் பரவலாக லேசான மழை பெய்தது. தொடர்ந்து, 3–வது நாளாக இதே சீதோஷண நிலை நீடிப்பதால் கத்திரி வெயிலின் தாக்கம் நேற்று குறைந்து காணப்பட்டது.

**<u>விவசாயிகள், நிவாரணத்தொகை பெற ஜுன் 26–ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம்</u>**

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் நொய் யல் ஆற்றில் சாயக் கழிவு நீரால் பாதிக்கப் பட்ட நிலங்களின் உரிமையாளர்கள் உரிய நிவாரண தொகை பெற வரும் ஜுன் 26–ந்தேதிக் குள் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதா வது:–

<u>உரிய நிவாரண தொகை வழங்க...</u>

கரூர் மாவட்டத்தில் நொய்யல் ஆற்றில் சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு உரிய நிவாரண தொகை வழங்க நில உரிமையாளர்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டு நிவாரண தொகை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக நொய்யல் ஆறு மற்றும் வாய்க்கால் பாசன விவசாயிகள் நலசங்கம் மற்றும் பல்வேறு சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் மீது ஆணை பிறப்பித்த உயர்நீதிமன்றம், பாதிக்கப்பட்ட விவசாயி களிடம் இருந்து மனுக்கள் பெறுவதற்கு கால அவகாசம் வழங்கி ஆணையிட்டது.

<u>ஜுன் 26–ந்தேதிக்குள்...</u>

அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நொய்யல் ஆற்று ஆயக்கட்டுதாரர்கள் பாதுகாப்பு சங்கம் தாக்கல் செய்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து, மனுக்கள் பெறுவதற்கான காலக்கெடுவை வருகிற ஜுன் 26–ந்தேதி நீட்டித்து ஆணையிட்டு உள்ளது.

எனவே நொய்யல் ஆற்றில் சாயக்கழிவு நீர் கலந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலங்களின் சர்வே எண்களை குறிப்பிட்டு நிவாரணம்

கோரி அவர் களது மனுக்களை சுற்றுசூழல் இயல் இழப்பு (தடுத்தல் மற்றும் இழப்பீட்டு தொகை வழங்குதல்) ஆணையம், 148/298 பீட்டர்ஸ்சாலை, சென்னை என்ற முகவரிக்கு வரும் ஜூன் 26–ந்தேதிக்குள் அனுப்பி வைக்கலாம்.

இந்த வாய்ப்பு உச்ச நீதிமன்ற ஆணைப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு உள்ளது என்றும், வரும் ஜூன் 26–ந்தேதிக்குள் பாதிக் கப்பட்ட விவசாயிகள் மனு செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே மனு அளித்த விவசாயிகள் மீண்டும் மனு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு அதில் கலெக்டர் கூறி உள்ளார்.

**<u>திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் கருணைக்கிழங்கு கிலோ ரூ.70–க்கு விற்பனை</u>**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் கருணைக்கிழங்கு ரூ.70–க்கு நேற்று விற்பனை ஆனது.

<u>கருணைக்கிழங்கு</u>

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டுக்கு, திண்டுக்கல்லை அடுத்த சிறுமலை, தாண்டிக்குடி ஆகிய மலைப்பகுதிகளில் இருந்து கருணைக்கிழங்கு விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம் வரை நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் கிலோ முதல் 4 ஆயிரம் கிலோ வரை

கருணைக்கிழங்குகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. அந்த அளவிற்கு விளைச்சல் நன்கு இருந்தது. மழை இல்லாத காரணத்தால் அதன்பிறகு படிப்படியாக விளைச்சல் குறைந்து போனது. தற்போது நாளொன்றுக்கு 1 டன் அளவிலான கருணைக்கிழங்குகள் தான் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது.

ஒரு கிலோ ரூ.70

கடந்த மாதம் விளைச்சல் நன்கு இருந்த போது ஒரு கிலோ கருணைக்கிழங்கு ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டது. அதன்பிறகு கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரை உயர்ந்தது. இப்போது இன்னும் விலை உயர்ந்து ஒரு கிலோ கருணைக்கிழங்கு ரூ.70–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இனி வரும் சில நாட்களுக்கு இதே போல் தான் கருணைக்கிழங்கின் விலை நிலவரம் இருக்கும் என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார். இதுதவிர, ஒட்டுத்தக்காளி ஒரு கிலோ ரூ.10–க்கும், நாட்டுத்தக்காளி ரூ.20, முருங்கைக்காய் ரூ.15 முதல் ரூ.20 வரையிலும், வெண்டைக்காய் ரூ.25, கத்தரிக்காய் ரூ.25 முதல் ரூ.35 வரையிலும், கொத்தவரங்காய் ரூ.10, பச்சை மிளகாய் ரூ.60, பீன்ஸ் ரூ.45, அவரைக்காய் ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் நேற்று விற்பனை ஆனது.

**காரைக்குடியில் அதிகபட்சமாக 43 மில்லி மீட்டர் மழை பதிவு**




சிவகங்கை மாவட்டத்தில் அதிகபட்சமாக காரைக் குடியில் 43 மில்லி மீட் டர் மழை பதிவாகியுள்ளது.

<u>3-வது நாளாக நீடிப்பு</u>

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரம் அடைந் துள்ளதை தொடர்ந்து சிவ கங்கை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடக்க நாளில் இருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

கடந்த 2 நாட்களாக தொடர்ந்து பெய்த மழை நேற்று 3-வது நாளாக நீடித் தது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மாவட்டத்தில் பல பகுதிகளில் விடிய, விடிய மழை பெய்தது.

இந்த மழை யின் காரணமாக ஏற்கனவே நிலவி வந்த கடும் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இந்த மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கண்மாய், ஊரணி, குளங்களில் தண்ணீர் வரத்து அதிகரித்துள் ளது.

<u>அதிகபட்ச மழை</u>

நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

காரைக்குடி 43, மானா மதுரை 37, சிவகங்கை 31, திருப்புவனம் 30.6, திருப் பத்தூர் 2, இளையான்குடி 7, தேவகோட்டை 10.4, மாவட்டத்தில் அதிக அளவாக காரைக்குடியில் 43 மில்லி மீட்டரும், குறைந்தஅளவாக திருப்பத்தூரில் 2 மில்லி மீட் டரும் மழை அளவு பதிவாகி யுள்ளது.

நேற்று பகலில் மாவட்டம் முழுவதும் வெயிலே காணமுடியாத அளவுக்கு வானம் மேகமூட்டத் துடன் காணப்பட்டது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீரின் தூய்மை நம்மால் அமையும்!



**அருண்**

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஒரு நாள் மட்டும் பாடுபட்டால் போதாது, தினமும் செயல்பட்டால்தான் அதிவேகமாகச் சீரழிந்து வரும் நமது இயற்கையைச் சிறிதளவாவது காப்பாற்ற முடியும் என்று நம்புகிறார் என்விரான்மென்டலிஸ்ட் பவுண்டேஷன் ஆஃப் இந்தியாவின் (இ.எஃப்.ஐ.) நிறுவனர் அருண். அதற்காகவே அதிவேகச் செயல்திட்டத்தை வகுத்து, 'திட்டம் 100' என்ற பெயரில் தன் குழுவினருடன் தீவிரமாகக் களம் இறங்கியிருக்கிறார்.

### திட்டம் 100

பிப்ரவரி 25லிருந்து ஜூன் 5 வரையிலான நூறு நாட்களில் ஆர்வலர்களுடன் இணைந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ஏதாவது ஒரு செயலைச் செய்வதற்காகவே இந்தத் திட்டத்தை ஆரம்பித்ததாகச் சொல்கிறார்அருண். "நீர்நிலைகளைச் சுத்தப்படுத்துவது, மரக்கன்று நடுவது, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் தெருக்கூத்துகளை நடத்துவது போன்றவற்றைச்

செய்கிறோம். இதுவரை 1,000 பேரைச் சூழலியல் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தியுள்ளோம்" என்கிறார் அவர். சென்னையில் மட்டுமில்லாமல் கோயம்புத்தூர், புதுச்சேரி, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களிலும் இத்திட்டம் நடைபெற்றுவருகிறது.

**சுத்தமாகும் நீர்நிலைகள்**

பல்லுயிர்கள் வாழ ஆதாரமாக இருப்பவை நீர்நிலைகள். நீர்நிலைகள் செழிப்பாக இருந்தால் நமக்கு நேரடியாக நல்ல தண்ணீர் கிடைப்பது மட்டுமில்லாமல், பல உயிர்களுக்கு அது வாழிடமாகவும் விளங்குகிறது. ஆனால் நகர்மயமாக்கம் காரணமாகச் சென்னை போன்ற பெருநகரங்களில் நீர்நிலைகள் அழிக்கப்பட்டுக் கான்கிரீட் கட்டிடங்களாக மாறிப், பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதைக் கருத்தில் கொண்டே நீர்நிலைகளைச் சுத்தப்படுத்துவதை முக்கியப் பணியாகத் தேர்ந்தெடுத்ததாகக் கூறுகிறார் அருண்.

அரசன்கழனி, கீழ்க்கட்டளை ஏரிகளில் இருந்து நீர்நிலை மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்கியது இ.எஃப்.ஐ. மாடம்பாக்கம், முடிச்சூர், நாராயணபுரம், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், தாம்பரம் போன்ற பகுதிகளில் இருக்கும் ஏரிகள், குளங்களை மறுசீரமைக்கும் பணிகளைச் செய்துவருகிறார்கள். இ.எஃப்.ஐ சார்பாகத் தென்னிந்தியாவின் பல்வேறு நகரங்களில் 34 ஏரிகள் சுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நீர்நிலைகளை மறுசீரமைப்பதில் முதல் கட்டமாகத் தூர்வாருகிறார்கள். அடுத்ததாக, தூர்வாரிய படிவுகளை வைத்துக் கரையை வலுப்படுத்துகிறார்கள். மூன்றாவதாகக் கரையை உறுதிப்படுத்த ஏரியைச் சுற்றி மரக் கன்றுகளை நடுகிறார்கள். கடைசியாக, ஏரி ஆக்கிரமிக்கப்படுவதையும் மாசுபடுவதையும் தவிர்ப்பதற்கு வேலி அமைக்கிறார்கள்.

**நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு**

நகரங்களில் உள்ள நீர்நிலைகள் காணாமல் போனதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஏரி நிலங்களில் ஆக்கிரமிப்பு, மாநகராட்சி குப்பை கொட்டுதல் போன்றவை அவற்றில் முக்கியமானவை.

பல ஏரிகளைச் சீரமைக்கும்போது இந்தப் பிரச்சினைகளைச் சந்தித்திருப்பதாகச் சொல்கிறார் அருண். பெரும்பாக்கம் ஏரி சீரமைப்பில் இந்தப் பிரச்சினைகள் அதிகமாக இருந்ததாகக் கூறும்

அருண், "அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளின் கழிவு நீர் ஏரியில் கலக்கிறது. அத்துடன் ஏரியில் இருக்கும் அதிகமான தூர், நில ஆக்கிரமிப்பு, எண்ணெய் கசிவு, சிறு தொழில்நிறுவனங்களின் கழிவுகளும் அதில்தான் கலக்கின்றன" என்கிறார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான வேலைகளைச் செய்யும்போது முக்கியமாக எதிர்கொள்ளும் சவால் சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பற்றிய அக்கறையே இல்லாத மக்களின் மனநிலைதான் என்று கூறும் அருண், "அதை மாற்றுவதற்குத்தான் 'திட்டம் 100'-ன் ஒரு பகுதியாகச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த 50 தெருக்கூத்துகளுக்கு ஏற்பாடு செய்துள்ளோம்" என்கிறார்.

இவர்களுடைய பணிகளில் பெரும்பாலும் ஈடுபடுவது தன்னார்வ மாணவர்களும் பகுதிவாழ் மக்களும்தான். "இ.எஃப்.ஐயின் முதன்மைக் குழுவில் 47 மாணவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரையும் சுற்றுச்சூழல் ஆளுமைகளாக உருவாக்குவதே எங்கள் முக்கியக் குறிக்கோள்" என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் அருண்.



**கூகுளைத் துறந்து விருது பெற்றவர்**

பலரும் ஒரு பக்கம் வேலை பார்த்துக்கொண்டே, கிடைக்கும் நேரத்தில் சமூக அக்கறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுவார்கள். ஆனால், உலகப் புகழ்பெற்ற கூகுள் நிறுவனத்தில் பார்த்துக்கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு என்விரான்மென்டலிஸ்ட் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா (இ.எஃப்.ஐ.) என்னும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பை 2011-ல் தொடங்கினார் அருண் (28).

தன் சுற்றுச்சூழல் ஆர்வத்துக்குத் தூண்டுதலாக இருந்த தாக உலகப் புகழ்பெற்ற வாலில்லாக் குரங்கு ஆராய்ச்சியாளர் ஜேன் குடாலை இவர் குறிப்பிடுகிறார். குடால் இந்தியாவுக்கு ஒரு முறை வருகை தந்தபோது, நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த அருணின் டைரியில் பாராட்டுக் குறிப்பு ஒன்றை எழுதியிருக்கிறார்.

அதை இன்றளவும் பாதுகாப்பாக வைத்திருக்கும் அருண், குடாலின் ரூட்ஸ் அண்ட் ஷூட்ஸ் இந்தியப் பிரிவிலும் தன்னார்வச் சேவை புரிந்திருக்கிறார்.

தற்போது சென்னை, ஹைதராபாத், டெல்லி, கோயம் புத்தூர் நகரங்களில் அவர் தொடங்கிய இ.எஃப்.ஐ செயல் பட்டுவருகிறது. தான் உத்வேகம் பெற்றது போலவே, பள்ளி களில் மாணவர்களை நேரடியாகச் சந்தித்து உரையாடுவதன் மூலம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பரவலாக்கிவருகிறார் அருண்.

அவருடைய அமைப்பில் தன்னார்வலர்களாக இணைந்து சேவை செய்யும் பலரும் மாணவர்கள்தான்.

சென்னை கீழ்க்கட்டளை ஏரியைச் சீரமைத்ததற்காக 2012-ல் மதிப்புமிக்க ரோலக்ஸ் எண்டர்பிரைஸ் விருது (இளம் சாதனையாளர்) அருணுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

*தொடர்புக்கு: arunoogle@gmail.com, efievents@gmail.com, 9940203871*

## தமிழகத்தில் கன மழை வாய்ப்பு: மீனவர்களுக்கு எச்சரிக்கை



தமிழகத்தில் அடுத்த 48 மணி நேரத்தில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ள சென்னை வானிலை ஆய்வு மையம், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்ட தகவல்:

கன்னியாகுமரி அருகே தென்மேற்கு வங்கக் கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தற்போது காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி தீவிரமடைந்துள்ளது.

வட மேற்கு திசையில் நகர்ந்து கொண்டிருக்கும் இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை, அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் தீவிரமடைந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் பல இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், அடுத்த 48 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கன மழையும், சில நேரங்களில் மிக கன மழை பெய்யலாம்.



சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், சில நேரங்களில் மழை பெய்யக்கூடும்.

கடல் காற்று மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகம் வரை வீசும் என்பதால் அடுத்த 24 மணி நேரத்துக்கு தமிழகம், கேரளம் மற்றும் லட்சத்தீவுகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை அய்வு மையம் எச்சரித்துள்ளது.